வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 25.01.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 51 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## உரிமையை தவறாக பயன்படுத்தாதீர்கள்!

### பங்காளிகளுக்கு அரசு அட்வைஸ்

கொழும்பு, ஜன.25

'அரசின் செயல்பாடு கள் தொடர்பில் விமர்ச னங்களை முன்வைப்பதற்கு பங்காளிக்கட்சிகளுக்கு உரிமை இருக்கின்றது. ஆனால் அந்த உரிமையை பொருத்தமான இடத்தி லேயே பயன்படுத்த வேண்டும்.' - என்று வெளி விவகார அமைச் சர் பேராசிரியர்

15

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்காக ஐ. நாவை நாடுகிறார் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜன. 25

ஈஸ்டர் தாக்குதல் வழக்கை சர்வதேச அள வில் எடுத்துச் செல்வதற் கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராந்து வருவ தாக கொழும்பு பேரா யர், கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நீதி கிடைக்க தங்களால் முடிந்தவரை முயற்சித்த தாகவும் இந்த முயற்சி கள் அனைத்தும் தோல்வியடைந்துவிட் டன என்றும் அவர் கூறினார்.

எனவே சர்வதேசத் துக்குச் செல்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகவும்



அதற்கு அர்த்தம் ஐக்கிய நாடுகள் சபைக்கு செல் வது என்றும் அவர் கூறினார்.

மேலும் இந்த வழக்கை முன்னெடுத் துச் செல்வதற்காக இலங் கையுடன் தொடர்பு வைத்திருக் கும் சக்தி வாய்ந்த நாடு களையும் தாம் அணுக வுள்ளதாக கொழும்பு பேரா யர் குறிப்பிட்டார்.

15

## எந்த தேர்தல் நடந்தாலும் எமக்கு வெற்றி உறுதியே!

### சஜித் பிரேமதாஸ நம்பிக்கை

கொழும்பு, ஜன. 25

'நாட்டில் எந்தவொரு தேர்தல் நடத்தப்பட்டா லும் அதில் ஐக்கிய மக் கள் சக்தியே நிச்சயம் வெற்றிபெறும்.' - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மக்களை பாதுகாப் போம் எனக்கூறி ஆட் சிக்கு வந்தவர்கள், இன்று எல்லா

15

## தொற்றால் 14 பேர் பலி!

கொழும்பு, ஜன. 25

கொரோனா தொற் றால் நாட்டில் நேற்று முன்தினம் 14 பேர் உயிரி ழந்தனரென அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த வர்களில் 8 ஆண்களும் 6 பெண்களும் உள்ளடங்கு கின்றனர். அந்த வகை யில், 30 வயதுக்கு உட் பட்டவர்களில் பெண் ஒருவரும், 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப் பட்டவர்களில் 4 ஆண்க ளும், 3 பெண்களுமாக 7 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 4 ஆண்களும் 2 பெண் களுமாக 6 பேரும் உயிரிழந்தனர்.

15

## தமிழர் விரும்பும் தீர்வை முதலில் வழங்கவேண்டும்!

### ஜே.வி.பி. தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜனவரி 25

'தமிழ் மக்களின் பிரதான எதிர் பார்ப்பான அரசியல் பிரச்னைக்கு முத லில் தீர்வு காணப்பட வேண்டும்.'



- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

"அரசியல் தீர்வு மாத் திரம் தமிழ் மக்களின் பிரச்னைகள் அல்ல. அதைவிட அவர்களின் அத்தியாவசிய தேவைக ளைத் தீர்ப்பதே முக்கி யம். அவற்றைத் தீர்த்து வைப்பது தொடர்பி லேயே முதலில் நாம் கவனம் செலுத்துகின் றோம்" என்று நிதி அமைச்சர் பஸில் ராஜ பக்ஷ தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத் துரைக்கும்போதே அநு ரகுமார எம்.பி. மேற்கண் டவாறு கூறினார்.

அவர் மேலும்

15

## ரயிலுடன் மோதுண்டு மாணவன் உயிரிழப்பு

### சாவகச்சேரியில் பரிதாபம்

தென்மராட்சி, ஜன. 25

பாதுகாப்பற்ற புகையிரத் கடவையை கடக்க முற்பட்ட மாணவன் ஒருவர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்தார். இரட்டையர்களில் ஒருவர் புகை யிரதக் கடவையை கடந்த நிலையில், பின்னால் சென்ற மற்றவரே ரயிலுடன் மோதுண்டு உயிரிழந் தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை

15

## யாழ்ப்பாண மக்கள் கட்டாயமாக பூஸ்டர் தடுப்பூசி பெறவேண்டும்!

### மாவட்ட கட்டளை தளபதி

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அனைத்து மக்க ளும் மூன்றாம் கட்ட பூஸ்டர் தடுப்பூசியினை கட்டாய மாக பெற்றுக்கொள்ள வேண்டும்", என யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டி. ஜி. எஸ். செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊட கங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மேலும், நாட்டில் தற்போது கொரோனா

15

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசமைப்பில் நாட்டமில்லை!

### இப்படிச் சொல்கிறார் மிலிந்த மொறகொட

புதுடில்லி, ஜன. 25

"நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொள்ளும் போது அங்குள்ள மக்கள் அரசமைப்பில் நாட்டம் காண்பிக்கவில்லை என்ப தைப் புரிந்து கொள்ளமுடிந்தது. மாறாக அபிவிருத்தியும் வாழ்வாதார வசதிகளுமே அவர்களின் தேவைகளா கக் காணப்படுகின்றன. எனவே, அனைத்து அரசி யல் கட்சிகளும் இதனை முன்னிறுத்தி செயல் படவேண்டியது அவசி யம்", என்று இந்தியாவுக் கான இலங்கை உயர்ஸ் தானிகர் மிலிந்த மொற கொட கூறியுள்ளார்.

அத்துடன், கோட்டா பய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப்

15

## அடுத்த பாதுகாப்பு அமைச்சர் நானே!

### பொன்சேகா சபதம்

கொழும்பு, ஜன. 25

'ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி விரைவில் மலரும். அந்த ஆட்சியில் நான் தான் பாதுகாப்பு அமைச் சராக பதவி வகிப்பேன்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா

15

## அமைச்சுகளில் தலையிடும் சீனத் தூதரக அதிகாரிகள்!

### அமைச்சருடன் கடும் வாய்த்தர்க்கம்

கொழும்பு, ஜன. 25

அமைச்சுகளில் நடக் கும் கூட்டங்களில் இலங் கையிலுள்ள சீனத் தூத ரக அதிகாரிகளின் தலை யீடு அதிகரித்திருப் பதாக அமைச்சர்கள் பலர் ஜனாதிபதி மற்றும் பிரத மரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பில் அமைச்சரவையின் கவ னத்துக்கும் கொண்டுவர அமைச்சர்கள் பலர் முடிவு செய்துள்ளனர்.

அண்மையில் நெடுஞ் சாலைகள் அமைச் சின் கூட்டமொன்

15

## வடக்கு ஆளுநர் செயலகம் முன்னால் தொண்டர் ஆசிரியர்கள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் இன்று வடமாகாண ஆளு நர் செயலகத்துக்கு முன் னால் கவனவீர்ப்பு நடவ டிக்கையில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பில் ஈடுபட்ட தொண்டர்

15



# ஜனாதிபதி பதவிக்காலம் நீடிப்பு கூற்றை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது

## எச்சரிக்கின்றது ஜே.வி.பி.



**கொழும்பு, ஜன. 25**

**ஜனாதிபதியின் பதவிக்காலம் இரண்டு வருடங்கள் நீடிக்கப்படவேண்டும் என சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுவதை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.**

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இதனை தெரிவித்தார்.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே அண்மையில் வெளியிட்ட கருத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றும் அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களை பேச வைத்து சோதித்துப் பார்க்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வருடங்களில் பொதுமக்களுக்குச் சேவை செய்ய முடியவில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்த கருத்து மூலம் தற்போதைய அரசாங்கம் பொதுமக்களுக்காக பணியாற்றத் தவறிவிட்டது என்பது தெளிவாகிறது எனவும் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மாணவர்களுக்கான கல்வியை நாசமாக்கியுள்ளது என்றும் விவசாயிகளுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தியதோடு மரக்கறிகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்தியது என்றும் அவர் குற்றம் சாட்டினார். (அ)

---

### இளைஞர் கடத்தப்பட்ட சம்பவம்:

# ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு மே 23 ஆம் திகதி விசாரணைக்கு

கொழும்பு, ஜன. 25

இளைஞர் ஒருவரை கடத்திய சம்பவம் தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிரான வழக்கு விசாரணை திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை எதிர் வரும் மே மாதம் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிமன்றம் அறி வித்துள்ளது.

மேலும் குறித்த தினத்தில் முறைப்பாட்டாளரின் முதலாவது சாட்சியை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நோட்டீஸ் அனுப்பவும் கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2015 டிசெம்பர் 21 ஆம் திகதி, தெமட்டகொடை பகுதியில் வைத்து, ஹிருணிகாவின் மெய்ப் பாதுகாவலர்கள், அவருக்கு சொந்தமான டிபென்டர் வாகனத்தில் வைத்து இளைஞர் ஒருவரைக் கடத்தினர்.

இதனை அடுத்து மெய்ப்பாதுகாவலர்கள் 8 பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில், ஒத்தாசை புரிந்ததாக ஹிருணிகா மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

---

# புத்தளம் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 25

லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் புத்தளம் கல்லடி பகுதியில், நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

விபத்து சம்பவத்தில் உயிரிழந்த நபர் சிராம்பையடி சின்ன நாகவில்லு பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் என தெரியவந்துள்ளது.

குருநாகலில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்ற லொறியுடன் கல்லடி பகுதியிலிருந்து ஆனமடுவ நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும் புத்தளம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும் மதுபோதையில் இருந்தனர் என பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவித்தனர்.

லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

---

# மின்வெட்டை நடைமுறைப்படுத்தாமல் மின்சார நெருக்கடியை தீர்க்க முயற்சி

கொழும்பு, ஜன. 25

மின்வெட்டை நடைமுறைப்படுத்தாமல் தற்போதுள்ள மின்சார நெருக்கடிக்கு தீர்வு கிட்டும் என நம்புவதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், இந்த விடயம் தொடர்பாக இன்று(நேற்று) காலை ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதாக அவர் தெரிவித்தார்.

மேலும் மத்திய வங்கி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடலை நடத்தவுள்ளதாகவும் காமினி லொக்குகே குறிப்பிட்டார். (அ)

---

# கசிப்பு உற்பத்தி செய்தவர் கொக்கட்டிசோலையில் கைது!

கொக்கட்டிச்சோலை, ஜன. 25

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திமலை பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று மாவட்ட குற்றதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பி. எஸ். பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 20,000 மில்லி லீற்றர் கசிப்பு போத்தல்களை நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் கைப்பற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

---

## இப்படியும் நடக்கிறது…!

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ரணில் கவிழ்ந்து விடாமல் போக அவரைக் காப்பாற்றுவதில் நாம் காட்டிய அக்கறையை தமிழர் உரிமையைப் பெறுவதில், பெறக்கூடியவற்றையாவது பெறவில்லையே என்ற கவலையும் குறையும் இருந்தாலும் சில விடயங்களை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

பல விடயங்களில் குறிப்பாக, மனித உரிமைகள் விடயங்களில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன.

முள்ளிவாய்க்காலில் மரணித்தவர்களை நினைவுகூர முடிந்தது. அதிகம் ஏன், கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், புலிகளின் தலைவர் போல 'போஸ்' கொடுத்து மாவீரர் தீபம் ஏற்றவும் முடிந்திருந்தது.

ஆனால், அவை எல்லாவற்றிற்கும் அப்போது பாதுகாப்பு படைகளுக்கு பொறுப்பாக இருந்த மைத்திரியும் பிரதான காரணம் என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஆனால், கடந்த ஜனாதிபதி தேர்தலில் இன்றைய ஜனாதிபதி, வேட்பாளராக களம் இறங்கியபோது, அவர் வெற்றிபெற்றால் மீண்டும் வெள்ளைவான் வரும், மாவீரர் தினத்தில் தீபம் ஏற்றியவர்கள் எல்லாம் கைது செய்யப்படுவார்கள், முன்னாள் போராளிகள் பல நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டி வரும் என்றெல்லாம் பிரசாரம் செய்தோம்.

அந்த பிரசாரங்களே, எதிரணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தமிழ் மக்களின் வாக்குகளை அப்படியே 'அள்ளிக்' கொள்ள காரணமாக இருந்தது.

அப்படியிருந்தும், மைத்திரியைப்போல சிறுபான்மையினரின் வாக்குகளை பெற்றால் சஜித் பிரேமதாஸவே வெற்றிபெறுவார் என்று எதிர்பார்த்த எமக்கு, சிங்கள மக்கள் வேறுவிதமாக பதிலளித்தனர்.

ஆனால், கோட்டாபய வெற்றிபெற்ற பின்னர், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எமது தலைவர்கள் தத்தமது வீட்டு 'கோடி'க்குள் நடத்தி படங்களை எடுத்து, ஊடகங்களுக்கு அனுப்பவேண்டிய நிலைமையே ஏற்பட்டது.

யுத்தத்தில் மரணித்த உறவுகளை நினைவுகூருவதற்குக்கூட எமக்கு உரிமை மறுக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளை முற்றும் நிராகரிக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்றும், அதுவரை ஜி. எஸ். பி. சலுகை வழங்கப்பட மாட்டாது என்றும் ஐரோப்பிய ஒன்றியம் நிபந்தனை விதித்த பின்னரும் அதனை நீக்குவதற்கோ, அல்லது மாற்றங்களைச் செய்வதற்கோ இந்த அரசு இன்னமும் நாட்டம் காட்டவில்லை.

இன்றுள்ள சட்டத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைய மாற்றுவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, செயலில் காட்டுவதாக இல்லை.

இந்த நிலையிலேயே கடந்த வாரம் இலங்கை வந்த பிரிட்டனின் பொதுநலவாய விவகாரங்களுக்கும் ஐ. நா. விவகாரங்களுக்கும் பொறுப்பான அமைச்சர், இலங்கை மனித உரிமைகள் விடயங்களில் முன்னேற்றம் கண்டிருப்பதாக 'சேர்ட்டிபிக்கேற்' கொடுத்துச் சென்றிருக்கிறார்.

ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தால் எந்த விடயங்களில் மோசமான நடவடிக்கைகளை எதிர்கொள்ளவேண்டிவரும் என்று நமது தலைவர்கள் எச்சரிக்கை செய்தார்களோ அந்த விடயத்தில்தான் அவர் நற்சான்றிதழைப் பெற்றிருக்கிறார். அதுவும், எந்த நாடு இலங்கைக்கு எதிராக ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தைக் கொண்டுவந்ததோ, அந்த நாட்டின் அமைச்சர் அதுவும், ஐ. நா. விவகாரங்களை கவனிக்கின்ற அமைச்சரிடமிருந்து அது கிடைத்திருக்கிறது.

இந்தச் செய்தியைப் படித்ததும் லண்டனிலுள்ள தமிழ்த் தேசிய செயல்பாட்டாளர் ஒருவருடன் பேசினேன்.

'இதுதான் உங்கள் பிரசாரத்திற்கு கிடைத்த பயனா?' என்ற கேள்விக்கு அவரிடமிருந்து வந்த பதில், 'எனக்கும் ஏற்கனவே இருந்த சந்தேகம்தான்.'

கடந்த நவம்பர் மாதத்தில் அமெரிக்கா சென்றிருந்த கூட்டமைப்பின் சட்டவல்லுநர் குழு, பின்னர் அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டதும் அந்த குழுவில் இடம் பெற்றிருந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கனடா சென்றனர். பின்னர் அப்படியே பிரிட்டன் சென்றனர். அதுவும் அவர்களின் அழைப்பிலேயே சென்றனரெனக் கூறப்பட்டது. அந்த விஜயத்தின்போது, அவர்கள் இருவரும் பிரிட்டனின் பொதுநலவாய விவகார அமைச்சரையும் சந்தித்திருந்தனர். அதாவது இன்று எந்த அமைச்சர் இலங்கைக்கு சான்றிதழ் கொடுத்தாரோ அவரையும் சந்தித்திருந்தனர்.

இந்த விஜயங்களை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய இருவரும், யாழ்ப்பாணத்தில் 'சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு' என்ற பெயரில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியிருந்தனர்.

அந்த கருத்துப்பகிர்வில், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சொன்ன ஒரு தகவலை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

தங்கள் விஜயத்தின் பலனை இந்த வருட ஆரம்பத்தில் சர்வதேசம் வெளிப்படுத்தும் என்றவாறாக அவர் அப்போது நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

ராஜபக்ஷ அரசுக்கு பிரிட்டன் இப்படியொரு சான்றிதழ் கொடுக்கவிருப்பதைத்தான் அவர் முன்னதாகத் தெரிந்துகொண்டு சொன்னாரோ என்று அந்த லண்டன் நண்பர் கேட்டபோதுதான், எனக்கும் உறுத்திக்கொண்டிருந்த அந்த விடயம் அவரையும் உறுத்துவது தெரிந்தது!

**- ஊர்க்குருவி**

ஈழநாடு
Eelanadu
25.01.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், தை 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மீண்டும் சந்திரிகா!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பொதுஜன முன்னணியை மீளவும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில், ஈடுபட்டுள்ளாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன. 2015 ஆட்சி மாற்றத்தின்போதும், சந்திரிகா நேரடியாகவும் திரைமறைவிலும் பிரதான பங்கு வகித்திருந்தார். ஆனால், ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து சந்திரிகா அமைதியானார். ஆட்சி மாற்றத்தின்போது காண்பித்த ஆர்வத்தை, அதனை தக்கவைப்பதில் சந்திரிகா காண்பிக்கவில்லை. அதே போன்று ஆட்சி மாற்றத்திற்காக ஒன்றுதிரண்ட கொழும்பு சிவில் சமூகத்தினர் அனைவரும், ஆட்சி மாற்றத்திற்கு பின்னர், தங்களுக்கான கதிரைகள் பற்றி சிந்தித்தார்களே தவிர, ஆட்சி மாற்றத்தைத் தக்கவைப்பதில் அர்பணிப்புடன் செயல்பட்டிருக்கவில்லை.

ரணில் - மைத்திரி முரண்பாட்டின்போது சந்திரிகா குமாரதுங்க போன்றவர்கள் தலையீடு செய்யவில்லை. மைத்திரி தனித்து விடப்பட்ட ஒருவராகவே காட்சியளித்தார். இந்தப் பின்புலத்தில் சாட்சிக்காரன் காலில் விழுவதை விடவும் - சண்டைக்காரன் காலிலேயே விழுவது மேலானதென்று எண்ணிய மைத்திரிபால சிறிசேன - எந்த மஹிந்தவை தோற்கடிக்கும் முயற்சிக்கு ஒத்துழைத்தாரோ - அதே மஹிந்தவை மீண்டும் பிரதமராக்க முற்பட்டார். சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற மஹிந்த தரப்புடனே, சிறீலங்கா சுதந்திரக் கட்சியை பங்காளியாக்கினார்.

ரணில் - மைத்திரி பிளவு ஆட்சி மாற்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை சுக்கு நூறாக்கியது. அந்த அதிருப்தியே ராஜபக்ஷக்களுக்கான வாய்ப்பாகவும் இருந்தது. ஆட்சி மாற்றத்தின் தோல்வியை தொடர்ந்து, சந்திரிகா குமாரதுங்க போக்கிடமில்லாத நிலையிலேயே இருந்தார். அவரின் தகப்பனாரால் ஆரம்பிக்கப்பட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அவருக்கே இடமில்லாமல் போனது. இந்த நிலையில்தான் சந்திரிகா மீளவும் களமிறங்கிருக்கின்றார்.

ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் ரணில் - மைத்திரி முரண்பாட்டால் அரசாங்கம் தள்ளாடியது போன்றே, இப்போதைய பொதுஜன பெரமுன அரசாங்கமும், எதிர்பார்த்ததை விடவும் வேகமாகவே ஆட்டம் காணத் தொடங்கியிருக்கின்றது. ஒப்பீட்டடிப்படையில் அரசாங்கம் பலமாக இருந்தாலும்கூட, அரசாங்கத்திற்குள் இருக்கும் பங்காளிக் கட்சிகள் விருப்பத்துடன் இல்லை. கடுமையான அதிருப்திகள் காணப்படுகின்றன. ஒருபுறம் பொருளாதார நெருக்கடியால், சிங்கள மக்களை அரசியல்வாதிகளால் எதிர்கொள்ள முடியவில்லை. மறுபுறும் பொதுஜன பெரமுனவிற்கும் பங்காளிகளுக்குமான முரண்பாடுகள் நிறுபூத்த நெருப்பு போல் இருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில்தான் சந்திரிகா குமாரதுங்க, தனது முன்னைய சகாக்களை அணிதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்.

2015இல் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்தும் முயற்சியோடு பிளவுற்றிருந்த பலரும் ஒன்றுபட்டனர். அடிப்படையில் நல்லுறவில்லாத ரணிலும் சந்திரிகாவும் ஓர் இலக்குக்காக பணியாற்றியிருந்தனர். அவ்வாறானதொரு சூழலை மீளவும் ஏற்படுத்துவதற்கு சந்திரிகா முயற்சிக்கலாம். தென்னிலங்கை அரசியல் பல வருடங்களுக்கு இப்படியே நகரக்கூடும். உடைவுகள் - பின்னர் முறிவுகள் - மீளவும் உடைவுகள் - இப்படியே சிறிது காலத்திற்கு செல்லலாம். ஏனெனில், நாடு பல்வேறு வகைகளில் நெருக்கடிக்குள் சிக்கிவிட்டது. இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை எவராலும் மீட்டெடுக்க முடியாது. ஆனால், இனவாதத்தை கைவிட்டு, தூர நோக்குடன் சிந்திக்கும் சிங்கள தலைவர் ஒருவர் மேலெழும் வரையில் நிலைமைகள் இப்படியே செல்லலாம்.

# தென்னிலங்கையில் 13ஆவது திருத்தச்சட்டம் குறித்த புரிந்துணர்வு!

அலசுவது இராஜதந்திரி

*1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து இலங்கையின் அரசியலமைப்பில் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக 13ஆவது திருத்தச்சட்டமே விளங்குகின்றது.*

*13ஆவது திருத்தச்சட்டம் இலங்கையில் கொண்டு வரப்பட்டபோது தென்னிலங்கையின் தீவிரவாத அரசியல்வாதிகள் மட்டுமல்ல. வடக்கு - கிழக்கில் அன்று ஆயுதப் போராட்டத்தை நடத்தி வந்த தமிழீழ விடுதலைப் புலிகளும் அதனை எதிர்த்தே இருந்தனர்.*

*ஆனால், 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்து விட்ட நிலையில் அந்தத் திருத்தச் சட்டமே இலங்கையில் வடக்கு - கிழக்கு இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான ஒரேவழி என்பதையும் இந்தியாவின் பங்களிப்பு இது தொடர்பில் இன்றியமையாதது எனவும் தென்னிலங்கை மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர்.*

*இதனை வெளிப்படுத்துவதாகவே நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் 43ஆவது படையணி என்ற அமைப்பின் மகாநாட்டில் 13ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.*

*இதுதவிர, 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியாவை சார்ந்திருப்பது சாதாரண விடயமல்ல எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர் ரோஹண லக்ஷ்மன் அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.*

*இதன்மூலம் 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படாதவரை இலங்கையில் ஒரு நீடித்து நிலைத்த நல்லிணக்கத்துடன் கூடிய சமாதானத்தை ஏற்படுத்த முடியாதென்பதை தென்னிலங்கையின் அரசியல் வட்டாரங்கள் நன்கறிந்து வைத்துள்ளன.*

*இலங்கையின் இன்றைய நிலைமையை எடுத்துக்கொண்டால் நாடோடித் தமிழில் குறிப்பிடுவது போல "அரசனை நம்பி புருஷனைக்கைவிட்ட" கதையாகவே இருக்கின்றது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு வரலாற்று ரீதியானது. இதனை 'தொப்புள் கொடி உறவு' என்று கூட குறிப்பிடலாம். ஏனெனில், இந்தியாவிலிருந்தே இன, மத, கலாசாரம், பண்பாடு தொடர்பான அனைத்து உறவு முறைகளும் இலங்கையில் வேரூன்றலாயின. சிங்கள மக்கள் தாம் இந்தியாவிலிருந்து வந்த விஜய மன்னனின் வழித்தோன்றல்கள் எனவும், பௌத்த மக்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பௌத்த மதத்தையே தமது மதமெனவும் குறிப்பிட்டு வருகின்றனர்.*

*இதுதவிர, கூப்பிட்ட குரலுக்கு குரல் கொடுப்பதுபோலவே இலங்கை தொடர்பான அனைத்துப் பிரச்னைகளுக்கும் இந்தியா தனது பங்களிப்பை வழங்கிவருகின்றது.*

*இந்தியா வேண்டுமானால் எண்பதுகளின் ஆரம்பத்தில் இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் ஆரம்பித்தபோது இந்தியாவில் அடைக்கலம் புகுந்த தமிழ் மிதவாத மற்றும் தீவிரவாத அமைப்புகள் விருப்பப்பட்டது போல வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பங்களாதேஷ் போன்று ஒரு தனி அரசை உருவாக்கியிருக்க முடியும். ஆனால், இலங்கையின் சுயாதிக்கத்துக்கும் , ஐக்கியத்துக்கும் மதிப்பளித்த நிலையிலேயே இந்தியா வடக்கு - கிழக்கு அமைப்புகளின் பிரிவினைவாதத்துக்கு இடம் தந்திருக்கவில்லை. அதேசமயம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மாகாண சபை மூலமான அதிகாரப்பரவலாக்கத்துக்கு வழியமைத்திருந்தது.*

*சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இருந்த இந்தியாவின் நிலை வேறு. இன்றைய இந்தியாவின் நிலை வேறாகவே இருக்கின்றது. இந்தியா ஒரு பொருளாதார வல்லரசாகவும் தென்னாசிய பிராந்தியத்தில் வளர்ச்சி கண்டுள்ளது. அத்துடன், இலங்கையின் இன்றைய பொருளாதார சிக்கல்களை தீர்க்கும் விதத்தில் இந்தியா 500 மில்லியன் டொலர்களையும் வழங்கி இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்தும் காப்பாற்றியுள்ளது.*


*இலங்கையின் இன்றைய பொருளாதாரம் வெளிநாட்டுக்கடன்களில் தங்கியிருக்கின்ற பொருளாதாரமாகவே பெரிதும் காணப்படுகின்றது.*

*இலங்கைக்கு சீனாவும் இந்தியாவும் போட்டியிட்டு கடன்களை வழங்கி தமது பிராந்திய ரீதியலான ஆளுமையை முன்னிறுத்த முயலுபவையாக இருக்கின்றன.*

*வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை பாதுகாக்க 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கத்தை கோரிநிற்கின்ற அதேசமயம், தென்னிலங்கை நிதி உதவியை பொருளாதார சிக்கல்களிலிருந்து மீள்வதற்கு இந்தியாவிடமிருந்து எதிர்பர்த்து நிற்கின்றது.*

*இந்நிலையில், 13ஆவது திருத்தச்சட்டத்தின் முக்கியத்துவத்தை தென்னிலங்கையர்களும் உணர்ந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர். இந்தத் தருணத்தில் அதன் அமுலாக்கம் குறித்த வேலைத்திட்டத்தை முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையும் இந்தியாவும் ஒன்றிணைந்து செயல்படுத்தியதைப்போல மீளவும் உரிய இராஜதந்திர அணுகுமுறைகளுடன் ஒரு செயல்திட்டத்தை வகுத்து 13ஆவது திருத்தச்சட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதன் மூலமே இலங்கையில் நீடித்த சமாதானத்தை ஏற்படுத்த முடியும். அத்துடன் ஒரு மேம்பட்ட நிலையில் இந்திய - இலங்கை உறவையும் பேண முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜனவரி - 25 செவ்வாய்க்கிழமை**
**பிலவ வருடம் - தை 12**
**நல்ல நேரம் : 7.30 - 9.00**
**ராகு காலம் : 3.00 - 4.30**
**திதி : அஷ்டமி**




**மேடம்**
நல்லோர் உதவியுடன் நினைத்த நன்மை ஒன்றை அடைவீர்கள். மனநிம்மதி கூடுதலாகும். நிதி நிலையில் முன்னேற்றம் இருக்கும். பணியிடத்தில் பிறரது ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**இடபம்**
நீங்கள் எதிர்பார்த்த விஷயம் ஒன்று வெற்றிகரமாக முடியும். இன்று மகிழ்ச்சியான திருப்பம் ஒன்று உண்டு. கவலை தீரும். மற்றவர்களுடன் அனுசரித்து சென்று பயன் அடைவீர்கள்.

**மிதுனம்**
எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து உங்களை சந்தோஷப்படுத்தும். எந்தவொரு செயலிலும் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். பிரியமானவர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வீர்கள்.

**கடகம்**
பொறுமையை இழக்காமல் பேசியே வெற்றி பெறுவீர்கள். உறவினர் ஒருவர் கோபமாகப் பேசினாலும் பொறுமையாக இருக்கவும். மற்றவர்களால் பிரச்னை ஏற்பட்டாலும் பொறுமை அவசியம்.

**சிம்மம்**
அதிர்ஷ்டம் தரும் நாள். சகோதரர் உதவி கேட்டு வருவார். சிலருக்கு வழிபாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு வரும். நீங்கள் எதிர்பார்த்ததை விட நல்ல செய்தி கூடுதலாக இருக்கும்.

**கன்னி**
சகபணியாளர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வெளியூர் பயணத்தால் நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்காது. உறவினர்கள் வருகையால் செலவினங்கள் அதிகரிக்கும்.

**துலாம்**
உங்களால் பெற்றோருக்கு பெருமிதம் ஏற்படும். மகிழ்ச்சி கூடும். பொறுப்பும், வேலையும் அதிகரித்தாலும் சமாளித்து வெல்வீரகள். திடீர் அதிர்ஷ்டம் உங்களுக்கோ உங்கள் தந்தைக்கோ வரும்.

**விருட்சிகம்**
மனதில் ஏற்பட்ட சிறு சிறு குழப்பங்கள் இன்று நீங்கும். தந்தையுடன் வீண் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். இன்று புதிதாக அறிமுகமாகும் நபரால் நன்மை ஏற்படும்.

**தனுசு**
பேசும் போது பொறுமையை கடைப்பிடித்தால் பிரச்னை இருக்காது. உங்களை விட இளையவர்கள் உங்களுக்கு நன்மை செய்வர். வாழ்க்கைத் துணையின் அறிவாற்றல் நன்மை தரும்.

**மகரம்**
குடும்பம் மகிழும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள். குடும்பத்தினர் சாதுர்யமாக செயல்பட்டு பிரச்னையில் இருந்து தப்புவார்கள். தேவையற்ற கற்பனை பயங்களால் குழப்பம் அடைவீர்கள்.

**கும்பம்**
பிறரது குடும்ப விஷயங்களில் தலையிட வேண்டாம். மறதியால் கடமை தவறுவதற்கு வாய்ப்புள்ளது. பணியில் கவனம் தேவை. எந்தவொரு விஷயத்தையும் கவனத்துடன் கையாள வேண்டும்.

**மீனம்**
உங்களது பேச்சினால் எதிர்பார்த்த மகிழ்ச்சிக்கு பதில் சங்கடம் வரும். செலவுகள் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். எதிர்பாராத செலவு ஒன்று வந்தாலும் அதனால் நன்மையே ஏற்படும்.

# தமிழக மீனவர் பிரச்னையை மத்திய, மாநில அரசுகள் மெத்தனமாக கையாள்வது சரியா?

## கேள்வி எழுப்புகின்றார் டிடிவி தினகரன்

சென்னை, ஜன. 25

"தமிழக மீனவர்களிடமிருந்து பிடித்த படகுகளை ஏலம் விட்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலுமாக அழித்துவிட துடிக்கிறது இலங்கை அரசு. இனியும் மத்திய, மாநில அரசுகள் இந்த பிரச்சினையை கையாள்வது சரியானது தானா?" என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக தனது ருவிட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"ஒரு பக்கம் இலங்கை கடற்படையினரின் தாக்குதல்,



இன்னொருபுறம் புதிதாக கிளம்பியிருக்கிற இலங்கை கடற்கொள்ளையரின் தாக்குதல் என தமிழக மீனவர்கள் அடுத்தடுத்து பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருகிறார்கள்.

நம்முடைய மீனவர்களிடமிருந்து பிடித்த படகுகளை ஏலம் விட்டு அவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலுமாக அழித்துவிட துடிக்கிறது இலங்கை அரசு. இனியும் மத்திய, மாநில அரசுகள் மெத்தனமாக இப்பிரச்னையைக் கையாள்வது சரியானதுதானா?

தமிழக மீனவர்கள் இவ்வாறு தாக்கப்பட்டு வருவது இந்தியாவிற்கே அவமானமில்லையா? இதனை நிரந்தரமாக தடுத்த நிறுத்த வேண்டிய கடமை மத்திய அரசுக்கு இருக்கிறது. வெறும் கடிதம் எழுதுவதோடு நிறுத்திவிடமால் மத்திய அரசை வலியுறுத்தி அதனை செய்திட வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு உள்ளது" என்று தினகரன் பதிவிட்டுள்ளார்.

# வெறிச்சோடிய சென்னை விமான நிலையம் இரு பயணிகளுடன் இயங்கிய விமானம்

சென்னை, ஜன. 25

தமிழகத்தில் நேற்று முன்தினம் நடைமுறைப்படுத்தப்பட்ட முழு ஊரடங்கால் பயணிகள் இல்லாமல் சென்னை விமான நிலையம் வெறிச்சோடியது. சென்னையில் இருந்து கர்னூல் சென்றவிமானத்தில் 2 பேர் மட்டுமே பயணித்தனர்.

கொரோனா தொற்று 3-வது அலைக்கு முன்பு சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் தினமும் 170-180 விமானங்கள் இயக்கப்பட்டன. பயணிகள் எண்ணிக்கையும் 30 ஆயிரத்தில் இருந்து 40 ஆயிரமாக இருந்தது.

3ஆவது அலைக்கு பிறகு, பயணிகள் எண்ணிக்கையும் குறையத் தொடங்கியது.



நேற்றுமுன்தினம் முழுஊரடங்கால் குறைவான அளவில்மட்டுமே விமான சேவை இருந்தது. பயணிகள் எண்ணிக்கையும் 12 ஆயிரமாக குறைந்தது.

சென்னையில் இருந்து தூத்துக்குடி சென்ற விமானத்தில் 9 பயணிகள், மதுரை விமானத்தில் 12 பேர், திருச்சி விமானத்தில் 14 பேர், மைசூர் விமானத்தில் 16 பேர் மட்டுமே பயணம் செய்தனர். சென்னை - கர்னூல் விமானத்தில் 2 பயணிகள் மட்டுமே சென்றனர்.

சென்னையில் இருந்து கோவை, டில்லி, மும்பை, ஹைதராபாத், கொல்கத்தாவுக்கு இயக்கப்பட்ட விமானங்களில் பயணிகள்கூட்டம் வழக்கம்போல இருந்தது.

# தமிழக மீனவர்களின் மீது கடற்கொள்ளையர் தாக்குதல்

சென்னை, ஜன. 25

தமிழக மீனவர்கள் மீது வேதாரண்யம் பகுதி கடலில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதுடன், அவர்களுடைய பொருட்கள் பலவும் கொள்ளையிடப்பட்டுள்ளது. இச்சம்பவத்துக்கு கடற்கொள்ளையர்களே காரணம் எனத் தெரிவிக்கப்படுவது இப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த புஷ்பவனம் பகுதியை சேர்ந்த மீனவர் ஒருவருக்க சொந்தமான படகே நேற்று முன்தினம் நள்ளிரவில் கோடியக்கரைக்கு தென் கிழக்கே மீன்பிடித்து கொண்டிருந்த போது தாக்கப்பட்டது. கடற்கொள்ளையர்கள் தமிழக மீனவர்களின் படகில் அத்துமீறி ஏறி அவர்களை இரும்புகம்பியால் கடுமையாக தாக்கி கடலில் தள்ளிவிட்டனர்.

படகில் இருந்த 200 கிலோ வலை, கைத்தொலைபேசி, எக்கோ சிலிண்டர் ஒன்று, வாக்கிடாக்கி, ஜிபிஎஸ், டீசல் உள்ளிட்ட ஒரு லட்சம் ரூபா மதிப்புள்ள பொருட்களை கொள்ளையடித்து தப்பி சென்றனர்.

காயத்துடன் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த மீனவர்களை பார்த்த சக மீனவர்கள் அவர்களை மீட்டு ஆறுகாட்டுத்துறை கடற்கரைக்கு கொண்டு வந்தனர். இதையடுத்து நேற்று காலை ஆம்புலன்ஸ் மூலம் மூவரும் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மீனவர்களை தாக்கியது இலங்கை கடற்கொள் ளையர்களா என்று தெரியவில்லை. இது குறித்த புகாரின் பேரில் வேதாரண்யம் கடலோர காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் நாகை, வேதாரண்யத்தை சேர்ந்த மேலும் 8 மீனவர்களை கடற்கொள்ளையர்கள் தாக்கியுள்ளனர் என்ற செய்தியும் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னை குடியரசு தின விழா; கலை நிகழ்ச்சிகள் இரத்து

சென்னை, ஜன. 25

கொரோனா பரவல் காரணமாக சென்னை மெரினா கடற்கரையில் நடைபெறும் குடியரசு தின விழாவில் கலைநிகழ்ச்சிகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. 4 அலங்கார ஊர்திகளுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய குடியரசு தின விழா ஜனவரி நாளை 26ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. தமிழக அரசு சார்பில் சென்னையில் மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள காந்தி சிலை முன்பு குடியரசு தின விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

முதலாவது அலங்கார ஊர்தியாக செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்டுள்ள ஊர்தி இடம் பெறுகிறது.

2ஆவது அலங்கார ஊர்தியில் வீரமங்கை வேலு நாச்சியார், மருது சகோதரர்கள், வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் அழகு முத்துக்கோன், பூலித்தேவன், ஒண்டிவீரன், வீரன் சுந்தரலிங்கம், குயிலி ஆகியோரது சிலைகளுடன் வேலூர் கோட்டை, காளையார்கோவில் கோபுரம் ஆகியவை இடம் பெறுகின்றன.

3ஆவது அலங்கார ஊர்தியில், சுதந்திரத்துக்காக பாடுபட்ட வ.உ.சி. செக்கு இழுக்கும் நிகழ்வு, பாரதியார், சுப்பிரமணிய சிவா, ராகவாச்சாரி மற்றும் அவருடன் விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களை காட்சிப்படுத்தும் தத்ரூப சிலைகளுடன் சுதேசி கப்பலும் இடம் பெறுகிறது.

4ஆவது அலங்கார ஊர்தியில் பெரியார், ராஜாஜி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இரட்டைமலை சீனிவாசன், வ.வே.சு.அய்யர், வாஞ்சிநாதன், தீரன் சின்னமலை, திருப்பூர் குமரன், காமராஜர், காயிதே மில்லத், ஜோசப் சி குமரப்பா ஆகிய தலைவர்களை சித்தரிக்கும் சிலைகள் இடம் பெறுகின்றன.

# தவறான பொருளாதாரக் கொள்கையே அனைத்து பிரச்னைகளுக்கும் காரணம்

## சுட்டிக்காட்டுகிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஜன. 25

**நாட்டில் நிலவும் பிரச்னைகளுக்கு அரசாங்கத்தின் தவறான பொருளாதார கொள்கைகளே பிரதான காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

தலவத்துகொடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் விவசாய சமூகம் எதிர்நோக்கும் அவலங்களை நாட்டின் தலைவர்களுக்கு தெரியுமா எனக் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக பொதுமக்கள் எதிர்நோக்கும் நிலைமையை அரசாங்கம் புரிந்து கொள்ளவில்லை.

உரங்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக அரசாங்கம் கடனைத் திருப்பிச் செலுத்துவதால் விவசாயத் தொழிலில் உள்ள 2.2 மில்லியன் மக்கள் மற்றும் நாட்டின் 2.2 பில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பை இழந்துள்ளனர்.

எதிர்காலத்தில் மசகு எண்ணெய் வழங்குவது ஒரு தீவிரமான கவலையாக இருக்கும்.

பெப்ரவரி மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு முகம் கொடுக்கும் மாணவர்கள் மின்வெட்டு காரணமாக கல்வி கற்க முடியாமல் தவிக்கும் சுமையை தலைவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

டிசெம்பர் 1, 2019 அன்று வழங்கப்பட்ட முக்கிய வரிச் சலுகைகளால் அரசாங்கம் தனது வருமானத்தில் 40 வீதம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனை இழந்தது.

இந்த நடவடிக்கையானது சர்வதேச நிதி நிறுவனங்களால் நாட்டின் கடன் மதிப்பீட்டை குறைத்துள்ளது.

100,000 இற்கும் அதிகமான ஊழியர்களை அரச துறைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் பெருமளவிலான நிதி ஒதுக்கிப் பொய்யான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது உள்ளிட்ட தேர்தல்



வாக்குறுதிகளை அமுல்படுத்தியமையினால் நாட்டின் செலவீனங்கள் அதிகரித்துள்ளன.

நாடு அன்னியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், எரிவாயு, மசகு எண்ணெய், பால்மா, மின்சாரம் மற்றும் மருந்துத் தட்டுப்பாடு நிலவும்போது கார்களை இறக்குமதி செய்வது முன்னுரிமையா?

குறைந்த விலையில் தடுப்பூசிகளைப் பெறுவதற்கான வாய்ப்பையும் அரசாங்கம் தவறவிட்டது.

தற்போது கோவிட் தடுப்பூசி இயக்கத்தைப் பற்றி அரசாங்கம் உயர்வாகப் பேசினாலும், கோவிட் தடுப்பூசிகள் அறிமுகப்படுத்தப்பட்டபோது, தனியார் துறையினர் தங்கள் சொந்த ஊழியர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு தடுப்பூசிகளுக்கு நிதியளிக்க முன்வந்தபோது, அரசாங்கம் தடுப்பூசிகளை வழங்க மறுத்துவிட்டது.

தடுப்பூசிகள் மற்றும் கோவிட் பரிசோதனை உபகரணங்களைப் பெறுவதை அரசாங்கம் ஒரு மோசடியாக மாற்றியுள்ளது-என்றார். (அ)

# பஸ்களில் நின்று பயணிப்பவர்களுக்கு புதிய கட்டண முறை அறிமுகமாகிறது

கொழும்பு, ஜன. 25

பஸ்களில் ஆசனங்களில் இருந்து பயணிக்கும் பயணிகளுக்கு ஒரு கட்டணமும் நின்று பயணிக்கும் பயணிகளுக்கு வேறொரு கட்டணமும் அறவிடும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ஆசன எண்ணிக்கையை விட அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றால் இரண்டு வகையான கட்டணங்கள் அறிவிக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், அமர்ந்திருக்கும் பயணிகளுக்கு ஒரு கட்டணமும், நிற்கும் பயணிகளுக்கு ஒரு கட்டணமும் அறிமுகப்படுத் தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பெப்ரவரியில் வருகிறார் அமெரிக்காவின் தூதுவர்

கொழும்பு, ஜன. 25

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கு அமெரிக்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சங் வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருகை தந்து தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

இந்த விடயத்தை இராஜாங்கத் தரப்பு தகவல்கள் உறுதி செய்துள்ளன.

இதேநேரம், அமெரிக்க தூதரகம் புதிய தூதுவரை வரவேற்பதற்கு எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவராக ஜூலி சங்கை நியமிக்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த ஆண்டு ஜூன் 15ஆம் திகதி பரிந்துரை செய்திருந்தார். இதன் பின்னர் அவர் தனது சமர்ப்பணங்களை செனட் சபையில் செய்திருந்தார். இதனையடுத்து கடந்த டிசெம்பர் 20இல் அமெரிக்க செனட் சபையினால் அவருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் எதிர்வரும் பெப்ரவரியில் இலங்கை



வந்து பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார். ஜூலி ஜியூன் சங், இலங்கைக்கு மேலதிகமாக மாலைதீவுக்கான தூதுவராகவும் நியமிக்கப்படவுள்ளார் என்று வெள்ளை மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென் கொரியாவின் சியோலில் பிறந்த ஜூலி சுங்குபவ் கலிபோர்னியா சான் டியாகோ மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்புகளை பயின்றுள்ளார். தூதுவராக நியமிக்கப்படுவதற்கு முன்னதாக இவர் அமெரிக்க வெளியுறவு ஆலோசகராகவும், இராஜாங்க திணைக்களத்தின் பதில் செயலாளராக கடமையாற்றியுள்ளர். (ஐ)

# மின்சாரம் தொடர்ந்தும் கிடைக்கும் என்று உத்தரவாதத்தை அரசால் வழங்கமுடியாது

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்

கொழும்பு, ஜன. 25

தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியாது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நடைமுறையில் நடைமுறைப்படுத்த தவறியமையே தற்போதைய நிலைமைக்கு காரணம் என அவர் கூறினார்.



கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், மின்சார உற்பத்திக்கு எரிபொருள் வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சர் கூறியுள்ளார்.

இருப்பினும் தொடர்ந்தும் மின்சாரம் வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியாது.

தற்போதைய நிலைமைக்கு எவரையும் குறை கூறமுடியாது. இந்த விடயம் தொடர்பான வேலைத்திட்டத்தை வகுக்கத் தவறியதன் விளைவே இது.

2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 70 சதவீதமாக அதிகரிக்கப்படும் என அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது-என்றார். (அ)

# கனியவள மண் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் விழிப்புணர்வு பதாதை!




மன்னார், ஜன. 25

மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோர பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத கனியவள மண் அகழ்வு மற்றும் ஆய்வுகளை உடனடியாக நிறுத்தக் கோரி 'மன்னாரின் சுற்றாடலை பாதுகாக்கும் அமைப்பின்' ஒழுங்கமைப்பில் பொது இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பதாதைகள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

மன்னார் கடற்கரையோரங்களில் காணப்படும் மணல்களில் மிகவும் விலை உயர்ந்த அரிதான 'தைத்தனியம்' எனும் கனிமம் அதிக அளவு காணப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த தைத்தனியத்தை அகழ்வு செய்யும் பணிகள் சட்டவிரோதமாக இடம் பெறுவதை தடுக்கக் கோரி குறித்த விழிப்புணர்வு பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்று குறித்த தைத்தனியம் அகழ்வுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் முதற் கட்டமாக மன்னாரில் பேசாலை, தலைமன்னார் உள்ளிட்ட பல பகுதிகளில் மணலுக்கு அடியில் பல மீற்றர்கள் குழி தோண்டப்பட்டு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த செயற்பாட்டை உடனடியாக நிறுத்தக் கோரி மன்னாரின் சுற்றாடலைப் பாதுகாக்கும் அமைப்பினர் மும்மொழிகள் அடங்கிய விழிப்புணர்வுப் பதாகைகளை பிரதான பஸ் நிலையம், வைத்தியசாலை சந்தி, மடு சந்தி உட்பட பல பகுதிகளில் காட்சிப்படுத்தியுள்ளனர். (அ)

# நாட்டில் வேகமாக பரவிவரும் கோவிட்

## வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 25

**நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஒமைக்ரோன் வைரஸ் திரிபு அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை 10 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் வைத்திய தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.**

அத்துடன், ஒட்சிசன் வழங்கப்படவேண்டிய நோயாளர்களின் எண்ணிக்கையும் 8 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் கோவிட்-19 தொற்று மீண்டும் வேகமாகப் பரவி வருவதாக அகில இலங்கை தாதியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மாத்திரம் கர்ப்பிணி தாதியர்கள் உட்பட 62 தாதியர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

ஏனைய வைத்தியசாலைகளின் அதிகளவான பணிக்குழாமினருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. (அ)

# நீர்வேலியில் மாணவர்களை மோதிவிட்டு தப்பியது பஸ்!

## இருவர் காயமுற்று வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜன. 25

பாடசாலைக்கு சென்ற மாணவர்கள் மீது மோதி விபத்துக்கு உள்ளாகிய தனியார் பஸ் ஒன்று அவ்விடத்திலிருந்து தப்பி சென்றுள்ளது.

இந்த விபத்தில் இரண்டு மாணவர்கள் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்வேலி பூதவராயர் மடம் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை 07 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

குடும்பப் பெண் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் தனது பிள்ளை உள்ளிட்ட இருவரை பாடசாலைக்கு அழைத்துச் சென்றவேளை, பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் அவர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மாணவர்கள் இருவரும், அவர்களை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற குடும்பப் பெண்ணும் காயங்களுக்கு உள்ளான நிலையில் மீட்கப்பட்டு கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் கோப்பாய் வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-03)

# காலியில் இன்று ஐ.தே.கவின் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 25

அரசாங்கத்துக்கு எதிராக, பாரிய மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை காலி பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு எதிரில் இன்று மாலை 3.00 மணியளவில் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

சம்பளப் பிரச்னைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்தல், அரசாங்க அதிகாரிகளுக்கான எரிபொருள் மற்றும் தொலைபேசி உள்ளிட்ட மேலதிக கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுக்குமாறும், கடன் வரையறையை நீக்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து இந்த மக்கள் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள மக்கள் கலந்துகொள்வார்கள் என்றும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது. (அ)

# மலையகத்தில் கடும் வறட்சி!

கொழும்பு, ஜன. 25

மலைநாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையினை தொடர்ந்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மிக வேகமாக குறைந்து வருகிறது.

காசல்ரி,மவுசாகலை, கெனியோன், லக்ஸபான,நவலக்ஸபான, விமல சுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்துள்ளன.

தேசிய மின் உற்பத்திக்கு பாரிய அளவில் பங்களிப்பு செய்யும் காசல்ரி நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் என்றுமில்லாதவாறு தாழ்ந்துள்ளது. தற்போது சுமார் 15 அடிவரை தாழ்ந்துள்ளதாக மின்சாரத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் தாழ்ந்து காணப்படுவதனால் நீரில் மூழ்கிக் கிடந்த கட்டடங்கள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன.

நீர் ஓடைகள்,அருவிகளின் நீர் வற்றிக் காணப்படுவதனால் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியும் பாரிய அளவில் குறைவடைந்துள்ளன. உள்ள பற்றைக்காடுகளுக்கு விசமிகள் மிருகங்களை வேட்டையாடுவதற்காகவும், பொழுது போக்குக்காகவும் தீ வைப்பதனால் நீரூற்றுக்கள் அற்றுப்போய் பாரிய குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயமும் காணப்படுகின்றன.

எனவே காடுகளுக்கு தீ மூட்டுவதை உடன் நிறுத்துமாறு பொது மக்களிடம் சூழல் ஆய்வாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக இந்த வறட்சியான காலநிலை காணப்படும் பட்சத்தில் விவசாயத்துறையும் பாதிக்கப்படுவதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன. (அ)

# அளவெட்டி ஸ்ரீ பசுபதீஸ்வரர் திருக்கோயிலுக்கு அடிக்கல்





யாழ்ப்பாணம், ஜன. 25

அளவெட்டி ஸ்ரீ பசுபதீஸ்வரர் திருக்கோயில் அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக நடை பெற்றது.

அடிக்கல்லை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனும் அமெரிக்கத் துறவியும் கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்ட முதல்வருமாகிய ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் இணைந்து நாட்டி வைத்தனர்.

ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம் இலங்கையில் அளவெட்டி எனும் கிராமத்தில் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் 1949ஆம் ஆண்டு யோக சுவாமிகளின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

சிறுவர்களுக்கான சமய, பண்ணிசை, நடன வகுப்புகள் பெரியவர்களுக்கான ஆன்மீக வகுப்புகள், யோகாசனம், சற்சங்கம் எனச் சிறப்பாக இயங்கி வந்த ஆச்சிரமம் 1980ஆம் ஆண்டுகளின் இறுதியில் யுத்தத்தால் முற்றாக சேதம் அடைந்து செயலிழந்தது. இருப்பினும் ஆச்சிரமத்தில் 1972ஆம் ஆண்டு குருதேவர் தாபித்த ஸ்ரீ பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் தொடர்ச்சியாக பூசைகள் நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம் மீள் புனரமைப்பின் முதற் கட்டமாக தியான மண்டபத்துடன் கூடிய சிவன் கோயிலுக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. (அ)

# மஞ்சள் கொள்வனவு பணி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 25

விவசாயிகள் அறுவடை செய்த மஞ்சளை கொள்வனவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு கிலோகிராம் மஞ்சளை 160 ரூபாவுக்கு கொள் வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மஞ்சளை கொள்வனவு செய்யும் பணியை ஏற்றுமதி வேளாண்மைத்துறை மற்றும் நறுமணப் பொருட்கள் சபை உள்ளிட்ட பல நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றன. (அ)

# ஊட்டச்சத்து குறைப்பாட்டால் உயிரிழக்கின்றன யானைகள்

கொழும்பு, ஜன. 25

ஹொரவப்பொத்தனை யானைகள் தடுப்பு நிலையத்தில் உள்ள காட்டு யானைகள் ஊட்டச்சத்து குறைப்பாடு மற்றும் மனித நடவடிக்கைகளினால் உயிரிழந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இங்கு கடந்த 5 ஆண்டுகளில் 12 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவைகளில் 5 யானைகள் ஊட்டச்சத்து குறைப்பாடு காரணமாக உயிரிழந்ததாக பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

நாட்டில் நீண்டகாலமாக நிலவி வரும் யானை-மனித மோதலுக்கு தீர்வு காணும் வகையில் 997 ஹெக்ரேயர் பரப்பளவில் ஹொரவப்பொத்தானை யானைகள் தடுப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பயிர்கள் மற்றும் மனித உயிர்களை சேதப்படுத்தும் காட்டு யானைகள் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இங்கு கொண்டு வரப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 52 காட்டு யானைகள் இந்த மையத்தில் காணப்பட்டதாக வனஜீவராசிகள் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில், குறித்த 52 யானைகளில் 12 யானைகள் உயிரிழந்துவிட்டதாக குறிப்பிப்பட்டிருந்தது.

இதில் 5 யானைகள் ஊட்டச்சத்து குறைப்பாடு காரணமாக உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த யானைகளின் பிரேத பரிசோதனை அறிக்கைகளில் இவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், யானைகள் ஊட்டச்சத்து குறைப்பாட்டால் உயிரிழக்கவில்லை என வனஜீவராசிகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# எரிபொருள் பாவனையை குறைப்பதற்கு யோசனை

## முன்வைத்தார் உதய கம்மன்பில



**கொழும்பு, ஜன. 25**

**தற்போது நிலவும் கடுமையான எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருள் பாவனையை குறைப்பதற்கான அவசர யோசனையை எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அரசிடம் சமர்ப்பித்துள்ளார்.**

எரிபொருள் விலை சூத்திரத்தை உடனடியாக அமுல்படுத்துமாறும் , கொழும்புக்கு வரும் வாகனங்களை மட்டுப்படுத்தவும் வாரத்தில் ஒரு நாள் காணொளி தொழில்நுட்பம் மூலம் பாடசாலைகளை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்தோடு அரச நிறுவனங்களின் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் மாநாடுகளுக்கு அதிகாரிகளை அழைப்பதை மட்டுப்படுத்தவும், பிரதேச செயலாளர்களை கொழும்புக்கு வரவழைப்பதை மட்டுப்படுத்தவும் அவர் யோசனையை முன்வைத்துள்ளார்.

எரிபொருள் பாவனையை குறைப்பதற்காக எரிபொருட்களின் விலைகள் கணிசமாக அதிகரிக்கப்பட்டபோதிலும், தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

உல்லாசப் பயணங்கள், உறவினர்கள் வருகை போன்ற பயணங்கள் அதிகரித்துள்ளமையும் எரிபொருள் பாவனை அதிகரிப்புக்கு காரணம் என்றும் அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

மேலும் பொது போக்குவரத்துக்கு பதிலாக தனியார் வாகனங்களின் பயன்பாடு அதிகரிப்பு மற்றும் எரிவாயு பற்றாக்குறை காரணமாக மண்ணெண்ணெய் பயன்பாடு அதிகரிப்பு ஆகியவை எரிபொருள் நுகர்வு அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, எரிபொருள் நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியை சமாளிப்பதற்கான யோசனையொன்றை மின்சக்தி அமைச்சு அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# தனியார் பல்கலை மாணவருக்கு அரசு வட்டியில்லாத கடன் உதவி

கொழும்பு, ஜன. 25

வட்டியில்லாத கடன் உதவியினூடாக அனுமதி பெற்ற தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பட்டப்படிப்பை தொடர்வதற்கான சந்தர்ப்பத்தை அரசு வழங்கியுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க அறிக்கையொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, 2018, 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் உயர் கல்விக்காக அரச பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசிக்க அனுமதி கிட்டாத மாணவர்களுக்காக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

களுத்துறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர் காரியாலயங்களையும் உள்ளடக்கும் வகையில் இம்மாதம் 28ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த வேலைத்திட்டம், அன்றைய தினம் காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை களுத்துறை மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (அ)

# புதையல் தோண்ட தெற்கிலிருந்து கிளிநொச்சி சென்ற 7 பேர் கைது!

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி, இராமநாதபுரம் பகுதியில் புதையல் அகழ்வதற்காக இரண்டு வாகனங்களில் சென்ற ஏழு பேர் கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து புதையல் தேடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஸ்கானர் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கைதானவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்று தெரியவந்துள்ளது.

இராமநாதபுரம், சம்புக்குளம் பகுதியில் புதையல் அகழ வந்ததாக அவர்கள் விசாரணையின்போது தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் புதையல் தோண்டும் முயற்சி தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஞ்சனுக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 25

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக தொடரப்பட்ட இரண்டாவது வழக்கின் விசாரணைக்காக அவர் நேற்றுத் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தார்.

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதிவரை நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் இரண்டாவது விசாரணையை ஒத்திவைக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டு கால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பிள்ளையார் சிலை வவுனியாவில் மாயம்

வவுனியா, ஜன. 25

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் காணப்பட்ட பிள்ளையார் சிலை மாயமாகியுள்ளது.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியிலுள்ள இலுப்பை மரத்தின் கீழ் சிறிய கூடாரம் அமைக்கப்பட்டு பிள்ளையார் சிலை வைத்து நீண்ட காலமாக வழிபடப்பட்டு வந்தது.

வவுனியா நகரின் இலுப்பையடிப் பகுதியிலுள்ள வர்த்தகர்கள், ஓட்டோச் சாரதிகள், அந்தப் பகுதியால் பயணத்தில் ஈடுபடும் மக்கள் என பலராலும் வழிபடப்பட்டு வந்த பிள்ளையார் சிலையே மாயமாகியுள்ளது.

இனந்தெரியாத நபர்கள் குறித்த சிலையை அங்கிருந்து அகற்றியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# தண்ணீரூற்று சந்தையின் காவலாளி மீது தாக்குதல்

## சொத்துக்களுக்கும் சேதம்

முல்லைத்தீவு, ஜன. 25

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான தண்ணீரூற்று பொதுச் சந்தைச் சொத்துகள் மீது நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சில விசமிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் சந்தையின் காவலாளியும் கடுமையான தாக்குதலுக்குள்ளாகி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதுபோதையில் சந்தையின் நுழைவாயிலை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற கும்பல் காவலாளியைக் கடுமையாகத் தாக்கியதுடன் பொது சந்தையின் கட்டடங்கள், தளபாடங்களை உடைத்துச் சேதமாக்கியுள்ளது.

மூன்று பேர் கொண்ட கும்பல் இணைந்து இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளமை பொதுச்சந்தை சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளது.

முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)







யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகமும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும் நேற்று முன்தினம் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# 13 ஆவது திருத்தத்தைக் கோருவது தமிழரை அடிமையாக்கும் சூழ்ச்சி



## 30 ஆம் திகதி போராட்டத்துக்கு ஆதரவை கோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

**போர் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்தும், அழிவிலிருந்து மீண்டெழுவதற்கு முடியாதவாறு தமிழ்த் தேசத்தில் மீன்பிடித்துறை, விவசாயத்துறை, வர்த்தகத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளையும் சிங்கள பௌத்த பேரினவாத அரசு முடக்கியும் ஆக்கிரமித்தும் வைத்துள்ளது.**

**போர்** முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்தும், அழிவிலிருந்து மீண்டெழுவதற்கு முடியாதவாறு தமிழ்த் தேசத்தில் மீன்பிடித்துறை, விவசாயத்துறை, வர்த்தகத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளையும் சிங்கள பௌத்த பேரினவாத அரசு முடக்கியும் ஆக்கிரமித்தும் வைத்துள்ளது.

இவ்வாறான நிலையில், கடந்த 34 வருடங்களாக நடைமுறையிலுள்ள, தோல்வியடைந்த, 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரியுள்ளமையானது, தமிழ் மக்களின் எதிர்காலத்தை பேரினவாதத்திற்கு நிரந்தரமாக அடிமையாக்கும் சூழ்ச்சியாகும். இச்சதிமுயற்சியை முறியடிப்பதற்காக விழிப்படைய வேண்டியது அனைத்து தமிழ் மக்களதும் வரலாற்றுக் கடமையாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. அரசியல் உரிமைகளை வலியுறுத்தும் 2022.01.30 ஆம் திகதிய பேரணிக்கான ஆதரவைக் கோருதல் என்ற தலைப்பில் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (பா.உ), பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் (பா.உ) ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது, இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

1987 இல் தமிழர்களுக்கான தீர்வு என்னும் பெயரில், 13ஆம் திருத்தச் சட்டம் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் புகுத்தப்பட்டு, 34 வருடங்களாக நடைமுறையிலிருந்தும், தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பையும் வழங்கியிருக்கவில்லை. இவ்வாறானதொரு 13 ஆம் திருத்தச்சட்டத்தை முற்றாக நடைமுறைப்படுத்த, இலங்கை அரசை வலியுறுத்துமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை கோரும் கடிதத்தை, இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எவ்) உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் அதன் பங்காளிக் கட்சியான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழ்த் தேசியக் கட்சியும் இணைந்து தயாரித்து, கூட்டாக கையொப்பமிட்ட கடிதத்தை 18-01-2022 அன்று இந்திய தூதுவரிடம் கையளித்துள்ளனர்.

சர்வதேச சமூகமானது, இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் யாப்பை உருவாக்க வேண்டுமென இலங்கை அரசைத் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றது. அத்தகைய சர்வதேச நெருக்கடி காரணமாகவே, கடந்த அரசு 2016 ஆம் ஆண்டில் புதிய அரசியல் யாப்பினைத் தயாரிக்கும் முயற்சியை ஆரம்பித்திருந்தது. தற்போது ஆட்சியிலுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும், சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே, புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கான குழுவினை கடந்த 2020 இறுதியில் நியமித்திருந்தார்.

அந்தக் குழுவின் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், எதிர்வரும் மாதங்களில் புதிய ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கான வரைபை பாராளுமன்றத்திற்கு கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கான நகர்வுகள் இடம் பெற்றுவருகின்றன. இவ்வாறான நிலையில் - தமிழ்த் தேசத்தின் இறைமை, சுயநிர்ணய உரிமையை ஏற்று சமஸ்டித் தீர்வை அங்கீகரிக்கும், புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கே, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளால் இலங்கை மீது அழுத்தம் பிரயோக்கிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் அது நடைபெற்றிருக்கவில்லை.

அதற்கு நேர்மாறாக, 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு, பிராந்திய வல்லரசு நாட்டின் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில், கோட்டாபாய அரசாங்கம் கொண்டுவரவுள்ள புதிய ஒற்றையாட்சி அரசியலமைப்பில் 13 ஆம் திருத்தத்திலுள்ள விடயங்கள் உள்ளடக்கப்படும் போது, அத்தகைய யாப்பினை ஆதரிக்காமல் இருக்க முடியாதென, மக்களை ஏமாற்றுவதற்காகவே மேற்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. புதிய ஒற்றையாட்சி அரசியல் யாப்பு பராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு வரும்போது, மேற்படி தமிழ்த் தரப்புக் கோரிக்கையே அந்த யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக காட்டி, மேற்படி கடிதத்தில் கையொப்பமிட்டுள்ள கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 பாராளுமன்ற உறுப்பினர்களும், அதனை ஏற்று ஆதரித்து வாக்களிக்கத் தயாராகியுள்ள சூழ்ச்சியையே குறித்த கடிதம் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

இவர்கள் நடைமுறைப்படுத்தக் கோரும் 13ஆம் திருத்தச் சட்டத்தில், அரச காணி அதிகாரமோ, பொலிஸ் அதிகாரமோ, நிதியைக் கையாளும் அதிகாரமோ மாகாண சபைக்கு கிடையாது. மாகாண நிதிக் கட்டுப்பாட்டைக் கொண்டிராததும், மாகாண திட்டமிடல் கட்டுப்பாட்டினைக் கொண்டிராததும், மாகாண அரச சேவையின் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டிராததும் மற்றும் ஆளுநருக்கு ஊழியம் செய்ய வேண்டிய சட்டபூர்வ கடப்பாட்டினைக் கொண்டதுமான - அமைச்சு அதிகாரமற்ற - மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளையும் அமைச்சர்களையும் கொண்ட சபையே 13ஆம் திருத்தத்தின் கீழான மாகாண சபைகளாகும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைக்கு அரசகாணியை கையாளும் அதிகாரம் அறவே இல்லை.

மாகாணத்தின் பொலிசும் பொது ஒழுங்கும் ஜனாதிபதியின் அதிகாரத்துக் குட்பட்டதே.

மாகாண நிரலில் உள்ள அதிகாரங்களை மத்திய பாராளுமன்றில் சட்டம் இயற்றுவதன் மூலம் பறித்துக் கொள்ளலாம்.

ஆளுநரின் அங்கீகாரம் இருந்தாலொழிய மாகாண நிதியத்திலிருந்த எந்தப் பணமும் திரும்பப் பெறமுடியாது.

நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரம் இல்லை.

வரவு செலவுத்திட்ட அறிக்கையை சமர்ப்பிக்க அதிகாரம் இல்லை.

13ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுதப்பட்ட மாகாண சபையின் அமைச்சர்களுக்கு, அமைச்சு அதிகாரங்கள் கூட வழங்கப்படவில்லை.

அமைச்சு அதிகாரங்களனைத்தும் ஆளுநருக்கே வழங்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் ஆளுநருடன் இணங்கிப் போகாவிடில் ஜனாதிபதி குறித்த மாகாண சபையை பொறுப்பேற்கலாம்.

சுருங்கக்கூறின் மாகாணசபை அதிகாரத்தின் மூலம், முதலமைச்சருக்கான இருக்கையை வாங்குவதற்கும், தேநீர் குடிப்பதற்கான செலவை ஈடுசெய்வதற்கும் கூட, ஆளுநரின் அனுமதியை பெற வேண்டிய நிலையிலேயே முதலமைச்சருக்கான அதிகாரங்களைக் கொண்டுள்ள மாகாணசபை, ஒருபோதும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தொடக்கப்புள்ளியாகக்கூட இருக்க முடியாது.

போர் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்தும், அழிவிலிருந்து மீண்டெழுவதற்கு முடியாதவாறு தமிழ்த் தேசத்தில் மீன்பிடித்துறை, விவசாயத்துறை, வர்த்தகத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளையும் சிங்கள பௌத்த பேரினவாத அரசு முடக்கியும் ஆக்கிரமித்தும் வைத்துள்ளது.

இவ்வாறான நிலையில், கடந்த 34 வருடங்களாக நடைமுறையிலுள்ள, தோல்வியடைந்த, 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரியுள்ளமையானது, தமிழ் மக்களின் எதிர்காலத்தை பேரினவாதத்திற்கு நிரந்தரமாக அடிமையாக்கும் சூழ்ச்சியாகும். இச்சதிமுயற்சியை முறியடிப்பதற்காக விழிப்படைய வேண்டியது அனைத்து தமிழ் மக்களதும் வரலாற்றுக் கடமையாகும்.

அந்த வகையில், வடக்கு கிழக்கிலுள்ள பொதுசன அமைப்புக்களையும், ஒற்றையாட்சியை நிராகரிக்கும் அரசியல் தரப்புக்களையும் இணைத்து - ஒற்றையாட்சி அரசியலமைப்பையும் அதன் கீழான 13ஆம் திருத்தத்தையும் முற்றாக நிராகரித்து - இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, வடக்கு கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசமும் அதன் இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்த சமஸ்டி' அடிப்படையிலான தீர்வை வலியுறுத்துவோம்.

மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தியும் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி கோரியும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்குரிய நீதியை வலியுறுத்தியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்தியும், அரசியல் கைதிகளினுடைய விடுதலையை வேண்டியும், எதிர்வரும் 30-01-2022 (ஞாயிற்றுக் கிழமை) அன்று யாழ். நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ள தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வலியுறுத்தும் பேரணிக்கு தங்களது அமைப்பினது பூரணமான ஆதரவைக் கோரி நிற்பதுடன், தங்களது அமைப்பின்- நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொண்டு வலுச் சேர்க்குமாறும் அன்புரிமையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இவ்வாறு இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

ஈழநாடு



# உக்ரைன் - ரஷ்யா இடையில் போர் பதற்றம் நிலவுவது ஏன்?

உக்ரைன் கிழக்கு எல்லைப் பகுதியில், ரஷ்யா சுமார் 1,00,000 படையினரை நிறுத்தியுள்ளது. நவீன ரக பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களையும் ரஷ்யா நிலை நிறுத்தியுள்ளது.

படையினரை நிலைநிறுத்தியது தொடர்பாக இதுவரை ரஷ்யா போதிய விளக்கமளிக்கவில்லை என்றும் கூறியுள்ளது அமெரிக்கா. மேலும், உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என அமெரிக்கா கூறியுள்ளது.

சில மேற்குலக நாடுகளைச் சேர்ந்த உளவு அமைப்புகள், 2022 ஆம் ஆண்டில் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுக்கலாம் என்றும் கூறியுள்ளன.

மேலும் நேட்டோ நாடுகளும், அமெரிக்காவும் உக்ரைனில் ஆயுதங்களைக் குவித்து, ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான பதற்றத்தை அதிகரிப்பதாக ரஷ்ய குற்றம் சாட்டியுள்ளது. ரஷ்யாவோ, உக்ரைன் மீது படையெடுக்கும் திட்டம் எதுவும் தங்களுக்கு இல்லை என்று கூறிவருகிறது.



**உக்ரைனின் இறையாண்மையைக் கட்டுப்படுத்த நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணையக் கூடாது என புதிய வாதத்தையும் முன் வைத்துள்ளது ரஷ்யா. மேலும் நேட்டோ அமைப்பு கிழக்கு நோக்கி முன்னேறுவதை நிறுத்துவது தொடர்பாக முறையாக உறுதியளிக்க வேண்டும் என்றும் தன் வாதங்களை முன் வைத்துள்ளது ரஷ்யா.**

### பிரச்னை என்ன?

1990கள் வரை உக்ரைன் சோவியத் ஒன்றியத்தின் ஓர் உறுப்பு நாடாகத்தான் இருந்தது. அதற்குப் பின் சோவியத் சிதைந்தபோது, சுதந்திரம் பெற்று தனி நாடாக தங்களுக்கென புதிய அரசமைப்புச் சட்டத்தோடு செயல்பட்டு வருகிறது.

இப்போதும் உக்ரைன் தன் எல்லைகளை ரஷ்யாவோடும், ஐரோப்பிய ஒன்றியத்தோடும் பகிர்ந்து கொள்கிறது. ஆனால் கலாசார ரீதியிலும் சமூக ரீதியிலும் ரஷ்யாவோடு பல தொடர்புகளைக் கொண்டுள்ளது உக்ரைன். இப்போதும் ரஷ்ய மொழி பேசுவோர் கணிசமாக உக்ரைனில் வாழ்ந்து வருகின்றனர்.

2014ஆம் ஆண்டு ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்த ஜனாதிபதி விக்டர் யனுகொவிச் (Viktor Yanukovych) பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில், உக்ரைனின் தெற்குப் பகுதியில் உள்ள கிரீமிய தீபகற்பத்தைக் கைப்பற்றியது ரஷ்யா. மேலும் கிழக்கு உக்ரைனில் கணிசமான பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளித்தது ரஷ்யா. இது தான் ரசோ - யுக்ரேனியன் (Russo-Ukrainian) போராக உருவெடுத்தது.

பிரிவினைவாதப் போராளிகளுக்கும் உக்ரைன் இராணுவத்துக்கும் இடை யிலான போரில் இதுவரை 14,000த்துக் கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இப்போதும் போர் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

### மின்ஸ்க் ஒப்பந்தம்

2015ஆம் ஆண்டு உக்ரைனின் அப் போதைய அதிபர் பெட்ரோ பொரொ ஷென்கோ - ரஷ்யாவின் விளா திமிர் புட்டின் இடையில் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. அது தான் மின்ஸ்க் ஒப்பந்தம் என்றழைக்கப்படுகிறது. உக் ரைன் மற்றும் ரஷ்ய ஆதரவோடு கிழக்கு உக்ரைனில் இருக்கும் பிரிவினைவாதப் படைகளுக்கு இடையிலான பிரச்னையைத் தீர்ப்பது இந்த ஒப்பந்தத்தின் நோக்கம்.

அதன் பிறகு 20க்கும் மேற்பட்ட முறை போர் நிறுத்தத்தைக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போயின. தொடர்ந்து எல்லையில் இரு தரப்பு படையினரும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

### தேர்தல் பிரச்னை

ரஷ்யா, உக்ரைன் இருநாடுகளுமே கிழக்கு உக்ரைன் பிரதேசத்தைக் குறித்து தங்களுக்கென தனித்தனிப் பார்வையைக் கொண்டுள்ளன. அது ஒன்றோடொன்று ஒத்துப் போகாமல் இருக்கிறது என்கிறார் சதம் ஹவுஸ் அசோசியேட் ஃபெல்லோவான டன்கன் ஆலன்.



உக்ரைன் தன் நிலப்பரப்புகளை மீண்டும் தன் நாட்டோடு இணைக்கவும், தன் இறையாண்மையை நிலைநிறுத்தவும் விரும்புகிறது, ஆனால் ரஷ்யாவோ, கிவ் (Kyiv) நகரத்தில் உள்ள அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தி கிழக்கு உக் ரைன் பகுதிக்கு சிறப்பு அந்தஸ்து அல்லது தன்னாட்சி அதிகாரத்தைப் பெற முயல்வதாக டன்கன் ஆலன் கருதுகிறார்.

உக்ரைன் உள்நாட்டுத் தேர்தலை நடத்தவில்லை என்றும், கிழக்கு உக்ரைனுக்கு சிறப்பு அந்தஸ்து கொடுக்காமல் அலைக்கழிப்பதாகவும் ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் உக்ரைன் அரசாங்கமோ, கிழக்கு உக்ரைனுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிவிட்டதாகக் கூறுகிறது.

மின்ஸ்க் ஒப்பந்தத்தின் படி, உக் ரைன் தன் நிலப்பரப்புகளை ரஷ்யாவிடமிருந்து முழுமையாக பெறுவதற்கு முன், உள்நாட்டில் தேர்தலை நடத்த வேண்டும்.

கிழக்கு உக்ரைனில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்றால், அப்பகுதி முதலில் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும் என வலியுறுத்துகிறது உக்ரைன். இல்லை எனில் தேர்தல் ரஷ்யாவின் அழுத்தத்தின் கீழ் நடைபெறும் என உக்ரைன் தரப்பு கூறுகிறது.

உள்ளூர் அளவிலான தேர்தல்களை நடத்தாமல் உக்ரைன், கிழக்கு உக்ரைன் பகுதிகளைப் பெற அனுமதிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ரஷ்யா கடுமையாக எச்சரித்தது.

உக்ரைனின் இறையாண்மையைக் கட்டுப்படுத்த நேட்டோ அமைப் பில் உக்ரைன் இணையக் கூடாது என புதிய வாதத்தையும் முன் வைத் துள்ளது ரஷ்யா. மேலும் நேட்டோ அமைப்பு கிழக்கு நோக்கி முன்னே றுவதை நிறுத்துவது தொடர்பாக முறையாக உறுதியளிக்க வேண்டும் என்றும் தன் வாதங்களை முன் வைத் துள்ளது ரஷ்யா.

மேற்குலகத்தின் அதிரடி போக்குகள் தொடர்ந்தால் இராணுவ ரீதி யில் தக்க பதிலடி கொடுக்கப்படும் என ரஷ்ய அதிபர் விளாதிமிர் புட் டின் சமீபத்தில் எச்சரித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது.

- பி.பி.சி.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

01) **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

காட்டில் சிங்கம் ஒன்று மனிதன் விரித்த வலையில் விழுந்து துடித்தது. ஒரு நுளம்பு பறந்து வந்து சிங்கத்தின் மூக்கில் கடித்தது. சிங்கம் நுளம்பைப் பார்த்துக் கர்ஜித்து மிரட்டியது.

"உனக்கென்ன தைரியம்? சிங்கராஜாவையே கடிக்குமளவுக்கு தைரியம் உனக்கு எப்படி வந்தது?

நுளம்பு பவ்வியமாகக் கூறியது.

"மனிதன் விரித்த வலையில் நீ விழுந்து கிடக்கிறாய்! ஆனால் மனிதனோ எனக்குப் பயந்து வலைகட்டி அதற்குள் விழுந்து கிடக்கிறான்."

❖ **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

i) மனிதன் விரித்த வலையில் சிக்கியது எது?

.......................................................................................................

ii) வனத்தில் என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது?

.......................................................................................................

iii) இங்கு தரப்பட்டுள்ள முன்னிலை ஒருமைச் சொல் ஒன்றைக் குறிப்பிடுக.

.......................................................................................................

iv) பயனிலை அடைமொழிச் சொல்லை எழுதுக.

.......................................................................................................

v) இங்கு அதிக தடவைகள் இடம்பெற்றுள்ள நிறுத்தக் குறியின் பெயர் யாது?

.......................................................................................................

vi) கடிக்குமளவுக்கு என்பதனைப் பிரித்தெழுதுக.

.......................................................................................................

02. பின்வருவனவற்றுள் சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

1) தெடுதிரை 2) தொடுதிரை 3) தொடுதிறை

03. **பின்வரும் வாக்கியங்களில் உள்ள சரியான சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளியைப் பூரணப்படுத்துக.**

i) பவளக்கொடி.............................. விற்று வந்தாள். **(பாள், பாழ், பால்)**

ii) சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி ........ந்தன. **(ஒளி, ஒலி, ஒழி)**

iii) சுதந்திரதின விழாவின் போது...................... வேடிக்கைகள் காணப்பட்டன. **(வான, வாண)**

04. **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

அதிகம்/ எங்களை/ சீனமக்கள்/உலகிலேயே/ பயன்படுத்துவோர் / ஆவர்.

.......................................................................................................

05. **பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்துக்களைத் தருக.**

i) கங்கணங்கட்டுதல் : ..........................................................................

ii) ஆறப்போடுதல் : ..........................................................................

06. **பின்வரும் பாடல்வரியைப் பூர்த்தி செய்க.**

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் தொல் உலகில்
.......................................................................
எல்லார்க்கும் பெய்யும் மழை.

07. **பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

i) ஒவ்வொரு பூவும் அழகானது. ( )

ii) மனிதன் என்பது படர்க்கை ஒருமையாகும். ( )

iii) சிங்கம் கர்ஜிக்கும் என்பது போல கரடி உறுமும். ( )

## விடைகள்

01.
1) சிங்கம்
2) காட்டில்
3) நீ / உனக்கு
4) கர்ஜித்து / விழுந்து / பவ்வியமாக
5) முற்றுப்புள்ளி
6) கடிக்கும் + அளவுக்கு (6x1=6 புள்ளிகள்)

02. தொடுதிரை (1 புள்ளி)

03. 1) பால் 2) ஒளி 3) வாண 4) இரை (4 புள்ளிகள்)

04. உலகிலேயே எங்களை அதிகம் பயன்படுத்துவோர் சீனமக்கள் ஆவர். (1 புள்ளி)

05.
1) ஒரு செயலை முடிக்க முனைந்து நிற்றல். (2x1=2 புள்ளிகள்)
2) பிற்போடுதல்/ காலந்தாழ்த்துதல்.

06. நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு (1 புள்ளி)

07.
1) சரி
2) சரி
3) சரி (1x3=3 புள்ளிகள்)

---

கல்வி tv CHANNEL-1

**25.01.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

கல்வி tv CHANNEL - 2

**25.01.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# போதை பொருளுடன் திருமலை அரசியல்வாதியின் மகன் கைது!

**கிண்ணியா, ஜன. 25**

**கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஹமட் லேன் பகுதியில் ஹஸிஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவரை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.**

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவரின் மகன் எனவும் தெரிய வருகின்றது

இவ்வாறு கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர் முஹமட் மஹ்சூம் அப்துல்லா (31வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிராந்தியத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேகநபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து ஹசிஸ் என்றழைக்கப்படும் போதைப் பொருள் ஒரு கிரேம் 170 மில்லி கிராம் மற்றும் ஹெரோயின் 150 மில்லி கிராம் கைப்பற்றப் பட்டதாக பிராந்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரியொருவர் தெரி வித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை போதைப்பொருளுடன் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். அவரை நீதிமன்றில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

# வவுனியாவில் யானைகளால் நெல் பயிர்கள் அழிக்கப்பட்டன!

வவுனியா, ஜன. 25

வவுனியா ஆசிகுளம் கிராம சேவகர் பிரிவில் வயலுக்குள் புகுந்த யானைகள் அங்கிருந்த நெல் பயிர்களை மிதித்து துவம்சம் செய்துள்ளன.

ஆசிகுளம் வயல் பகுதியில் தொடர்ச்சியாக யானைகளால் ஏற்படும் பாதிப்பு அதிகரித்து வருகின்றது என்று கூறப்படுகின்றது. இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு ஓர் ஏக்கருக்கும் அதிகமான நெல் வயலை யானை சேதமாக்கியுள்ளது.

ஏற்கனவே, பசளை இன்மையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தற்போது யானையின் பாதிப்புக்களுக்கும் முகம் கொடுக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் இருவர் சடலங்களாக மீட்பு!

கொழும்பு, ஜன. 25

கம்பகா - நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் வெவ்வேறு இடங்களில் இரு சடலங்களை பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டனர்.

நீர்கொழும்பு நீதிமன்ற வீதியிலிந்து அடையாளம் காணப்படாத ஆணின் சடலம் மீட்கப்பட்டது. சுமார் 65 வயதுடைய 4 அடி 05 அங்குலம் உயரமுடைய ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

இதேபோன்று, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குடாபாடுவையில் 75 வயது மதிக்கத்தக்க 4 அடி 6 அங்குலம் உயரமுடைய ஆணின் சடலம் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட இரு சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# நீராடியவரை காணவில்லை

கொழும்பு, ஜன.25

கண்டி, உடதும்புர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீமுரே பிரதேசத்திலுள்ள வாவி ஒன்றில் நீராடிக்கொண்டிருந்த நபரொருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என்று, உடதும்பர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திபிரிகஸ்கட்டுவை, நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த நபர் மற்றுமொருவருடன் இணைந்து நீராடிக் கொண்டிருந்த போதே நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். பிரதேச மக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து குறித்த நபரை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (கே)

# வெவ்வேறு விபத்துக்களில் மூவர் மரணம் இருவர் கைது!

கொழும்பு, ஜன. 25

களுத்துறை, அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில், நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் மரணமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை, வெலிப்பன்ன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வலகெதர பிரதேசத்தில், முச்சக்கர வண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சாரதி உட்பட பயணித்த மூவர் படுகாயங்களுக்கு இலக்காகினர். இவர்கள் சீனவத்தை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது ஒருவர் மரணமடைந்தார். வலகெதர பகுதியை சேர்ந்த 68 வயது நபரே மரணமடைந்தார்.

இதேபோன்று, அநுராதபுரம் மிகிந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புத்தளம்-திருகோணமலை வீதியில், மோட்டார் சைக்கிளொன்று சிறிய ரக லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர், அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். அநுராதபுரம் பிரதேசத்தை சேர்ந்த 64 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் - குருநாகல் வீதி, கல்அடிய 6 ஆம் மைல்கல் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளொன்று எதிரே வந்த லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார்.விபத்தில், சிறம்பியடி, புத்தளம் பிரதே சத்தை சேர்ந்த 27 வயது நபரே மரணமடைந்தார்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியை கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# ஒமைக்ரோன் தொற்று அலை ஏற்படும் அபாயம் அதிகரிப்பு

## கொரோனா சிகிச்சை நிபுணர் மல்காந்தி

கொழும்பு, ஜன. 25

கடந்த ஒரு வாரத்துக்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் சிகிச்சை பெற்றுவருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று அந்த சேவைக்கு பொறுப்பான விசேட மருத்துவர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக ஒமைக்ரோன் திரிபு தொற்று அலை ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார். கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பை காட்டுகின்றது.

இந்நிலையில், கடந்த ஒரு வாரத்துக்குள் வீடுகளில் இருந்து சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 347 ஆகக் காணப்பட்டது.

நாட்டில் டெல்டா திரிபு பரவல் ஏற்பட்டபோது இவ்வாறான எண்ணிக்கையிலேயே தொற்றாளர்கள் பதிவாகினர். அவ்வாறானதொரு நிலைமையே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ளது என்று, அவர் மேலும் தெரிவித்தார். (கே)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் நான்கு பொலிஸார் படுகாயம்!

கந்தளாய், ஜன. 25

திருகோணமலை - கந்தளாய் பிரதான வீதி சாலியபுர சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நால்வர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில், பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய்,கந்தலாவை பகுதியைச் சேர்ந்த சானுக தனபால (35 வயது) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே படுகாயமடைந்துள்ளார்.

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பொலிஸ் உத்தியோகத்தர் மூவரை ஏற்றிச் சென்றார் என்றும் குறுக்கே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. விபத்து தொடர்பிலான விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கொலையானவரை கைபேசியில் அழைத்தார் இராஜாங்க அமைச்சர்

## விசாரிக்குமாறு மன்றில் கோரிக்கை



மட்டக்களப்பு, ஜன. 25

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் வீட்டின் முன்பாக கொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தை, இராஜாங்க அமைச்சர் கைபேசியில் அழைத்திருந்தார். இது குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கொலை வழக்கு தொடர்பான நகர்த்தல் பத்திரம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

நீதிவான் ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி என். கமலதாஸ் வாதாடினர்.

வழக்கு தொடர்பில் கருத்துரைத்த சட்டத்தரணியும் எம்.பியுமான எம். ஏ. சுமந்திரன்,

“சம்பவம் நடைபெற்ற வேளையில் இராஜாங்க அமைச்சர் தன்னுடைய வீட்டிலிருந்தார் என்றும் அதன் பின்னரே அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார் என்ற தகவ லும் இருக்கும் காரணத்தால் இரண்டு விடயங்கள் தொடர் பில் விசாரணைகள் முன்னெடுக் கப்பட வேண்டும் என்று நீதி வானிடம் கோரியிருக்கின்றோம்.

இராஜாங்க அமைச்சர் எப்போது வீட்டைவிட்டு வெளியேறினார் என்பதை அறிவதற்காக வீதிகளில் உள்ள சி. சி. ரீ. வி காட்சிகள் விசாரணை செய்யப்படவேண்டும்.

இந்த வழக்கு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முறையாக முன்னெடுக்காமையால் வழக்கு கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று நீதிவான் தெரிவித்தார்”, என்றார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முதன் முதலில் தொடர்பை ஏற்படுத்திய இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அந்த அழைப்பை எடுத்த இடம் மற்றும் வழியில் இருந்த சி. சி. ரீ. வி. காணொலிகளை உடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்த வழக்கானது எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு





# 1 தொன்னுக்கும் அதிக நிறையுள்ள போதைப்பொருட்கள் கைப்பற்றல்!

ஓமன் வளைகுடாவில் ஒரு டன்னுக்கும் அதிகமான சட்ட விரோத போதைப்பொருட் களை றோயல் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

ஏறக்குறைய 10 மணிநேரம் நீடித்த நடவடிக்கையில், றோயல் கடற்படையினர் உள் ளிட்ட கடற்படைக் குழு,எச். எம்.எஸ். மாண்ட்ரோஸில் இருந்து புறப்பட்டு, ஓமன் கடற்கரைக்கு அப்பால் உள்ள சர்வதேச கடல் பகுதியில் சந்தேகத்துக்குரிய படகில் ஏறி சட்டவிரோத போதைப் பொருட்களை கைப்பற்றியது.

சட்டவிரோத போதைப் பொருட்கள், பகுப்பாய்வு செய் யப்பட்டு அழிக்கப்படுவதற்கு முன்னர், ஒருங்கிணைந்த கடல்சார் படைகளின் ஒரு பகுதியாக செயற்படும் எச். எம்.எஸ். மாண்ட்ரோஸ்க்கு மீண்டும் கொண்டு வரப்பட் டது.

அவற்றில் 663 கிலோ ஹெரோயின், 87 கிலோ மெத்தம்பேட்டமைன் மற்றும் 291 கிலோ ஹாஷிஷ் மற்றும் மரிஜுவானா ஆகியவை அடங்கும். இதன் மதிப்பு கிட்டத்தட்ட 15 மில்லியன் பவுண்ஸ்கள் ஆகும்.

படகு அல்லது அதன் தோற் றம் பற்றிய விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த ஆண்டு அரபிக்கட லில் எச்.எம்.எஸ் மாண்ட்டே ராஸ், 2.4 டன் போதைப்பொரு ளைக் கைப்பற்றியதில் இருந்து கைப்பற்றப்பட்ட மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் இதுவாகும்.

(அ)

# பிரியா-நடேசன் தம்பதி விஸா பெறுவதை தடுக்கும் அமைச்சின் முடிவு நியாயமற்றது

## அவுஸ்திரேலிய நீதிமன்றம் தீர்ப்பு

கான்பரா, ஜன. 25

அவுஸ்திரேலியாவில் இலங் கையைச் சேர்ந்த தமிழ் குடும் பம் ஒன்றின் இணைப்பு விசா வைப் பெறுவதற்காக விண்ணப் பிப்பதைத் தடுக்கும் வகையி லான குடிவரவுத்துறை அமைச் சின் முடிவானது, நியாயமற்றது என்று அந்த நாட்டின் பிராந் திய நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



பிரியா - நடேசன் குடும்ப உறுப்பினர்கள் இணைப்பு விசா வுக்கு விண்ணப்பிப்பதைத் தடுப்பதற்குத் தனது அதிகாரங் களைப் பயன்படுத்தக் கடந்த ஆண்டு ஜூன் மாத இறுதியில் குடிவரவு அமைச்சர் அலெக்ஸ் ஹாக் எடுத்த முடிவை நீதி மன்றம் நேற்று ரத்து செய்தது.

பிரியா மற்றும் நடேசன் ஆகியோருக்கும் அவரது மூத்த மகள் கோபிகாவுக்கும் 12 மாதங்களுக்கான இணைப்பு விசா வழங்கப்பட்டது.

எனினும் அவர்களது இளைய மகள் தரனிக்காவுக்கு விசா வழங்கப்படவில்லை.

அவரது மருத்துவ சிகிச்சை நடவடிக்கைகளால் குடும்பத்தி னர் பேர்த்தில் தங்கியுள்ளனர்.

இணைப்பு விசா காலம் நிறைவடைந்ததன் பின்னர் அவர்கள் நாடுகடத்தப்படும் அச்சுறுத்தல் இருப்பதால், பதற்றமான சூழ்நிலையில் பிரியா - நடேசன் குடும்பத்தி னர் வாழ்ந்து வருவதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

(அ)

# உக்ரைனில் உள்ள தூதரக ஊழியர்களை குடும்பத்துடன் வெளியேற அமெ. உத்தரவு

நியூயோர்க், ஜன. 25

உக்ரைனில் உள்ள தமது தூ தரக ஊழியர்களை, குடும்பங் களுடன் வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள் ளது.

இதன்படி, அங்கு பணி யாற்றி வரும் அத்தியாவசியப் பணிகளில் அல்லாத ஊழியர் கள் வெளியேற அமெரிக்க உட்துறை அனுமதி வழங்கி யுள்ளது. மேலும், உக்ரைனில் உள்ள அமெரிக்க குடிமக்களும் வெளியேற பரிசீலிக்குமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள் ளது.

உக்ரைன் மீது குறிப்பிடத் தக்க நடவடிக்கையை மேற் கொள்ள ரஷ்யா திட்டமிட் டுள்ளதன் பின்னணியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக அமெரிக்க உட் துறை அலுவலகம் தெரிவித் துள்ளது.




ஆனால், உக்ரைனை ஆக்கிர மிக்கும் திட்டம் எதுவும் தமக்கு இல்லை என்று ரஷ்யா தொடர்ந்து மறுப்பு தெரி வித்து வரு கின்றது.

இதனி டையே, உக்ரை னில் அமெரிக்க குடி மக்களுக்கு எதிராக சாத்தியம் மிக்க துன்புறுத் தல்கள் நடக்கலாம் என்பதால் உக்ரைன், ரஷ்யாவுக்கு அவர் கள் செல்லவேண்டாம் என்றும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

உக்ரைன் கிழக்கு எல்லைப் பகுதியில், ரஷ்யா சுமார் 1,00, 000 படையினரை நிறுத்தி யுள்ளது. மேலும், நவீன ரக பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங் களையும் நிலை நிறுத்தியுள் ளது.

படையினரை நிலைநிறுத்தி யது தொடர்பாக இதுவரை ரஷ்யா போதிய விளக்க மளிக்கவில்லை என்றும் கூறியு ள்ளது அமெரிக்கா. மேலும், உக்ரைன் மீது ரஷ்யா படை யெடுத்தால் தக்க பதிலடி கொடுக் கப்படும் என அமெரிக்கா கூறியுள்ளது.

(அ)

# ரஷ்ய சார்புத் தலைவரை உக்ரைனில் நிறுவ முயற்சி

## பிரிட்டன் வெளியுறவு அமைச்சு குற்றச்சாட்டு



லண்டன், ஜன. 25

ரஷ்யா உக்ரைனில் ரஷ்ய சார்பு தலைவரை நிறுவ முயல்வதாக பிரிட்டன் வெளி யுறவு அமைச்சு குற்றஞ்சாட்டி யுள்ளது.

மேலும், ரஷ்ய உளவுத்துறை அதிகாரிகள் பல முன்னாள் உக்ரைன் அரசியல்வாதிகளு டன் படையெடுப்புக்கான திட்டங்களின் ஒரு பகுதியாக தொடர்பு கொண்டிருந்ததாக பிரிட்டன் கூறுகின்றது.

உக்ரைனுடனான அதன் எல் லைக்கு அருகே ரஷ்யா துருப் புக்களை குவித்தமை தொடர் பாக ரஷ்யாவுக்கும் மேற்குக்கும் இடையே அதிக பதற்றம் நிலவிவரும் நிலையில், பிரிட் டன் வெளியுறவு அமைச்சு இந்த குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

எனினும், அதன் குற்றச்ச ாட்டுகளை ஆதரிப்பதற்கான ஆதாரங்களை வழங்க பிரிட்டன் வெளியுறவு அமைச்சகம் மறுத்துவிட்டது.

உக்ரைனின் முன்னாள் சட்டமியற்றுபவரான யெவ்ஹென் முராயேவை ரஷ்ய சார்புத் தலைமைத்துவத்துக்குத் தலைமை தாங்குவதற்கான சாத்தியமான வேட்பாளராக ரஷ்ய அரசாங்கம் பரிசீலித்து வருவதாகத் தன்னிடம் தகவல் இருப்பதாக பிரிட்டன் வெளி யுறவு அமைச்சு கூறியுள்ளது.

'உக்ரைன் அரசாங்கத்தை சீர்குலைக்கும் எந்தவொரு நடவடிக்கையை ரஷ்யா மேற்கொண்டாலும் கடுமையான பின்விளைவுக ளைச் சந்திக்கவேண்டிவரும். தற்போதைய சூழலின் தீவிரத்தை ரஷ்யா குறைக்க வேண்டும். இந்தப் பிரச்னைக்கு ராஜீய ரீதியில் தீர்வு காணும் பாதையை அந்நாடு பின் தொடர வேண்டும்'என பிரிட் டன் வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறுகையில்-

பிரிட்டன் பரப்பும் இந்தத் தவறான தகவல், உக்ரைனை சுற்றி பதற்றத்தை அதிகரிக்கும் நேட்டோ நாடுகளின் நடவடிக் கைகளுக்கான மேலும் ஓர் உதாரணம் - என்றார்.

(அ)

# ஹிட்லரின் வதைமுகாமில் வணக்கம் செலுத்திய பெண்ணுக்கு அபராதம்!

வார்சோ, ஜன. 25

ஹிட்லரின் வதை முகாமான ஆஷ்விட்ஸ் பிர்கெனாவ் வதை முகாம் இருந்த இடத்தில், நாஜி வணக்கம் செலுத்தியதற்காக நெதர்லாந்து பெண்ணொருவ ருக்கு அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

டச்சு சுற்றுலாப் பயணியான 29 வயதான பெண், நாஜி வணக்கம் செலுத்தியதற்காக போலந்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்த நிலையில், அவருக்கு அபராதம் விதிக்கப் பட்டது. அதனை அவர் ஏற்றுக்கொண்டார்.

பெயர் குறிப்பிடப்படாத பெண், நுழைவாயிலின் முன் சைகை செய்தார். அப்போது அதை அவரது கணவர் புகைப் படமெடுத்தார்.

போலந்தில் நாஜி பிர சாரத்தை ஊக்குவித்தமைக்காக




வெளிநாட்டவர்கள் தடுத்து வைக்கப்படுவது இது முதல் முறையல்ல. இதற்கு அங்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட லாம்.

2013ஆம் ஆண்டில், இரண்டு துருக்கிய மாணவர்கள் தலா ஆறு மாத சிறைத்தண்ட னையை எதிர்கொண்டனர்.

1939ஆம் ஆண்டு இரண் டாம் உலகப் போரின் தொடக்கத்தில் போலந்தை ஆக்கிரமித்த பின்னர் நாஜி ஜேர்மனி, தெற்கு போலந்து நகரமான ஓஸ்விசிமில் இந்த வதை முகாமைக் கட்டியது.

(அ)

# ஐ. சி. சி. சிறந்த டெஸ்ட் வீரர் விருதை வென்றார் ஜோ ரூட்!




டுபாய், ஜன. 25

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி.) 2021ஆம் ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருதை இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் வென்றுள்ளார்.

31 வயதான ஜோ ரூட், விருதுக்கான பந்தயத் தில் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் கைல் ஜமைசன், இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன மற்றும் இந்திய சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஷ்வின் ஆகியோரை பின்னுக்கு தள்ளி இந்த விருதை வென்றுள்ளார்.

ஜோ ரூபட் 2021ஆம் ஆண்டில் 15 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6 சதங்களுடன் 1,708 ஓட்டங்களை குவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒருநாள் அணியின் வீரர் விருது பாபர் அஸாம் வசம்!




டுபாய், ஜன. 25

2021ஆம் ஆண்டிற்கான ஐ.சி.சி.யின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதை பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் வென் றுள்ளார்.

27 வயதான பாபர் அஸாம் விருதுக்கான பந்தயத் தில் ஷகீப் அல் ஹசன், ஜான்மன் மலன் மற்றும் பால் ஸ்ரெர்லிங் ஆகி யோரை பின்தள்ளி இந்த விருதை பெற்றுள்ளார்.

பாபர் அஸாம் 2021ஆம் ஆண்டில் ஆறு ஒருநாள் போட்டிகளில் மாத்திரமே விளையாடியிருக்கிறார். ஆனால், இந்த ஆண்டு பாகிஸ்தான் விளையாடிய இரண்டு தொடர்களிலும் அவர் முக்கிய பங்களிப்பைச் செய்தார்.

பாபர் அஸாம் கடந்த ஆண்டு ஆறு போட்டிகளில் விளையாடி இரண்டு சதங்களு டன் 67.50 சராசரியில் 405 ஓட்டங்களை குவித்தமை நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

# பொதுநலவாய கிரிக்கெட் இலங்கை மகளிர் தகுதி!

கோலாலம்பூர், ஜன. 25

பொதுநலவாய விளையாட்டு விழாவின் மகளிர் கிரிக்கெட் போட்டிக்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது. தகுதிப் போட்டி தொடரில் பட்டம் வென்றதன் மூலமே இந்தத் தகுதியை இலங்கை மகளிர் அணி பெற்றது.

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் பொதுநலவாய விளையாட்டு விழா எதிர்வரும் ஜூலை 28 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இங்கிலாந்து,

இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா ஆகியன ஐ.சி.சி. இருபது - 20 தர வரிசையின்படி நேரடித் தகுதியை பெற்றுக்கொண்டன.

இந்நிலையில், கடந்த 18ஆம் திகதி மலேசியாவில் ஆரம்பமாகி நடைபெற்று வந்த பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான தகுதிகாண் போட்டித் தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது.

இலங்கை, பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து, கென்யா, மலேசியா அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில் இலங்கை அணி 4 போட்டிகளில் விளையாடி அனைத்திலும் வெற்றியீட்டி பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கு தகுதி பெற்றது.

நேற்று திங்கட்கிழமை காலை ஆரம்பமான லீக் தொடரின் கடைசிப் போட்டியில் இலங்கை மற்றும் பஙளோதேஷ் மோதின. இந்த இரு அணிகளும் விளையாடிய மூன்று போட்டிகளிலும் வெற்றியீட்டியிருந்தமையால் இப்போட்டி தீர்மானமிக்க போட்டியாக அமைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில்



அணித்தலைவி சாமரி அத்தபத்து 28 பந்துகளில் 48 ஓட்டங்களை விளாசினார்.

137 ஓட்டங்களை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் மகளிர் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 114 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 22 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சிலும் சாமரி அத்தப்பத்து 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை கைப்பற்றி அணியின் வெற்றிக்கு பெரிதும் பங்காற்றினார்.

இதேவேளை, கரீபியன் தீவுகளுக்கிடையில் நடைபெற்ற தகுதிகாண் தொடரில் வெற்றியீட்டிய பார்படோஸ் மகளிர் அணி இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியாவுடன் ஏ பிரிவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் காலிறுதியில் ஆஷ்லே



மெல்பர்ன், ஜன. 25

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸின் பெண்கள் பிரிவில் ஆஷ்லே பார்ட்டி காலிறுதிக்கு முன்னேறினார்.

நேற்று நடந்த போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையான அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டி அமெரிக்காவின் அமென்டா அனிசிமோவாவை எதிர்கொண்டார்.

அனிசிமோவா 3ஆவது சுற்றில் நடப்பு சம்பியனான ஜப்பானின் நவோமி ஒசாகாவை தோற்கடித்து இந்த சுற்றுக்கு முன்னேறியிருந்தார். இந்த நிலையில், நான்காவது சுற்றில் ஆஷ்லே பார்ட்டி 6-4, 6-3 என்ற நேர் செற்றில் வீழ்த்தி உள்ளூர் ரசிகர்களை மகிழ்ச்சிப் படுத்தினார்.

ஆஷ்லே பார்ட்டி காலிறுதியில் மற்றோர் அமெரிக்க வீராங்கனை ஜெசிகா பெகுலாவை சந்திக்கிறார். (ஐ)

# தென்னாபிரிக்காவிடம் தொடரை முழுமையாக இழந்தது இந்தியா!

கேப்டவுன், ஜன. 25

இந்தியாவுக்கு எதிரான பரபரப்பான மூன்றாவது இறுதியுமான ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் தொடரை 3 - 0 என்ற ஆட்டங்கள் அடிப்படையில் தென்னாபிரிக்கா முழுமையாகக் கைப்பற்றியது.

கேப்டவுனில் ஞாயிற்றுக் கிழமை நடந்த போட்டியில், குயின்ரன் டி கொக் குவித்த சதம், வான் டேர் டுசென் பெற்ற அரைச்சதத்தின் உதவியுடன் தென்னாபிரிக்கா 49.5 ஓவர்களில் 287 ஓட்டங்களைக் குவித்தது.

13ஆவது ஓவரில் தென்னாபிரிக்காவின் 3ஆவது விக்கெட் சரிந்தபோது அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 70 ஓட்டங்களாக இருந்தது. இதனைத் தொடர்ந்து ஆரம்ப வீரர் குயின்ரன் டி கொக், வான் டேர் டுசென் ஆகிய இருவரும் 4 ஆவது விக்கெட்டில் 144 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர். ஆனால், தென்னாபிரிக்கா வின் கடைசி 7 விக்கெட்கள் 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சரிந்தன.

குயின்ரன் டி கொக் 12 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 124 ஓட்டங்களையும், டுசென் 52 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் தவிர், டேவிட் மில்லர் 39 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தியாவின் பந்துவீச்சில் பிரசித் கிருஷ்ணா 3 விக்கெட்களையும் பும்ரா 2 விக்கெட்களையும் தீபக் சஹார் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா 49.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 283 ஓட்டங்களையே பெற்றது.

மொத்த எண்ணிக்கை 18 ஓட்டங்களாக இருந்தபோது ஆரம்ப வீரரும் அணித் தலைவருமான கே. எல். ராகுல் (9) ஆட்டமிழந்தார்.



எனினும் ஷிகர் தவானும் விராட் கோலியும் நிதானம் கலந்த வேகத்துடன் துடுப்பெடுத்தாடி 2ஆவது விக்கெட்டில் 98 ஓட்டங்களைப் பகிர்ந்து இந்தயாவுக்கு நம்பிக்கை ஊட்டினர்.

தவான் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து ரிஷப் பந்த வந்த வேகத்திலேயே ஓட்டம் பெறாமல் வெளியேறினார்.

தொடர்ந்து, விராட் கோலி 65 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

மத்திய வரிசையில் ஸ்ரேயாஷ் ஐயர் (26), சூரியகுமார் யாதவ் (39) ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய போதிலும் கணிசமான ஓட்டங்களைப் பெறத் தவறினர். இவர்கள் இருவரும் ஆட்டமிழக்க 40ஆவது ஓவரில் இந்தியா 6 விக்கெட் இழப்புக்கு 210 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பின்னர் வந்த தீபக சஹால் அதிரடியாக ஆடினார். அவர் 34 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 54 ஓட்டங்களை குவித்தார். எனினும், அவரின் பின்னர் வந்தவர்கள் வேகமாக ஆட்டமிழந்தனர்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் அண்டைல் பெலுக்வாயொ, லுங்கி நிகிடி தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதுகளை குயின்ரன் டி கொக் கைப்பற்றினார். (ஐ)




# அறிமுகமாகிறது டிஜிற்றல் பணப்பை மென்பொருள்!

கொழும்பு, ஜன. 25

'டிஜிற்றல் தேசிய அடையாள அட்டை' அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் நாட்டின் சகல பிரஜைகளுக்கும் டிஜிற்றல் பணப்பை ( digital wallet ) மென்பொருளை அறிமுகம் செய்ய எதிர்பார்த்துள்ளதாக இளைஞர் விவகார அமைச்சரும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கையடக்க தொலைபேசி மூலம் பணத்தை செலுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட டியுமேயு ஞசு குறியீட்டை கம்பஹாவில் மக்கள் மயப்படுத்தும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் அவ்வாறு குறிப்பிட்டார்.

கடவுச்சீட்டு, பிறப்பு, விவாகச் சான்றிதழ்கள், பரீட்சைப் பெறுபேறுகள் உட்பட அத்தியாவசிய தனிப்பட்ட ஆவணங்களை தமது கைத்தொலைபேசியில் களஞ்சியப்படுத்துவதற்கான டிஜிற்றல் கட்டமைப்பு வசதி இதன் மூலம் கிடைக்கும்.

தேவையான சந்தர்ப்பங்களில் எந்தவொரு சிக்கலும் இன்றி உரிய ஆவணங்களை டிஜிற்றல் முறையின் கைத்தொலைபேசி ஊடாக வழங்கும் வாய்ப்பு சகல பிரஜைகளுக்கும் கிடைக்கும் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் கூறினார். (அ)

# விண்ணக வாழ்வில் ஆண்டுகள் ஆறு

மலர்வு 13 - 10 - 1932



உலர்வு 25 - 01 - 2016

அமரர் **திருமதி பரமேஸ்வரி பாக்கியநாதர் (பாக்கியம்)**

"இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாயென்று
உறுதியாக நான் உனக்கு சொல்லுகிறேன்"

இற்றுவிடா இனிய வாழ்வை
எமக்களித்த எம் அன்புத் தாயே
நல்வளங்கள் அனைத்தையும் எமக்கு
தந்திட உனையே அர்ப்பணமாக்கி
எம் உயர்வில் அகமகிழ்ந்த அன்னையே,
எம்மோடு பலகாலம் வாழ்ந்திருப்பீர்
என்று நினைத்திருந்த வேளை
காலனவன் கணக்கினைத் தீர்த்திட
எமை விட்டுப் பிரிந்தீரோ?

உங்கள் ஆத்மா இறைசந்நிதியில் இளைப்பாற
பிரார்த்திக்கின்றோம்.

**நீங்காத நினைவுகளுடன்**
**மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள், உறவினர்,நண்பர்கள்**

# கடந்த காலம் செய்த தவறுகளை நாங்கள் இனம்காணவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்திக்கு பொன்சேகா ஆலோசனை



**கொழும்பு, ஜன. 25**

**கடந்த காலத்தில் செய்த தவறுகளை அடையாளம் கண்டு அதற்கு தீர்வு காணும் பயணத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

ஆட்சிக்கு வந்த பின்னர் அதே பழைய பாரம்பரிய அரசியல் பயணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும் ஈடுபட்டால் மக்களுக்கு நம்பிக்கை இருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததுடன் டொலரின் பெறுமதி சுமார் 30 ரூபாவால் அதிகரித்தது.

ஆகவே நாட்டின் வறுமையை நோக்கிய பயணத்துக்கு முன்னாள் அரசாங்கமும் பொறுப்பு.

எனவே எதிர்க்கட்சிகள் தற்போதைய நிலைமையை புரிந்து கொண்டு பின்னடைவுகளை சரிசெய்து கொண்டு முன்னேற வேண்டும்.

இந்த விடயங்களை தீர்க்காமல் அரசாங்கத்தை அமைத்தால், ஐந்து வருடங்களில் அரசாங்கம் கவிழும்-என்றார். (அ)

# பாடசாலைகளுக்குள் உயரும் கொரோனா தொற்று பரவல்!

## சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 25

நாட்டில் உள்ள பாடசாலைகளில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டு வருவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, மூடப்பட்ட இடங்கள் மற்றும் சிறிய வகுப்பறைகளில் உள்ள பாடசாலை மாணவர்கள் மீது கவனம் செலுத்தப்படவேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவரான உபுல் ரோஹண தெரிவித்தார்.

புத்தளத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நிறைய மாணவர்கள் மற்றும் போதிய இடவசதி இல்லாத வகுப்பறைகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்றும் இது கொத்தணிகளுக்கு வழி வகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக அவதானமாக இருந்தால் இவ்வாறான நிலைமையை ஓரளவு தவிர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பூஸ்டர் செலுத்தாதோர் மீது விரைவில் சட்ட நடவடிக்கை?

கொழும்பு, ஜன. 25

பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் கொரோனா தலைமை ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி, மூன்றாம் டோஸை கட்டாயமாக்குவதற்கு ஐரோப்பிய நாடுகளிலும் பல்வேறு வளர்ந்த நாடுகளிலும் இவ்வாறான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

இந்த நிலையில், இலங்கையிலும் அவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக சுகாதார அமைச்சரிடமும் சட்டமா அதிபரிடமும் ஆலோசனையைப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

**மணமகள் தேவை**

ஆண் 31 வயது. யாழ். இந்து வேளாளர். சுதுமலை. சைவபோசனம். உத்தரட்டாதி நட்சத்திரம் B.Sc(special) Computational Physics (Colombo) - ஆசிரியர் (physics & Computer Science) சைவபோசனமுடைய பெண் விரும்பத்தக்கது. ஆனால் கட்டாயமில்லை.

தொலைபேசி - 0762213233

# சாவகச்சேரி மின் மயான அபிவிருத்திக் குழு தெரிவு

வடமராட்சி, ஜன. 25

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நகரசபையின் கோரிக்கைக்கு அமைவாக புலம்பெயர் மற்றும் உள்ளூர் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் நிறுவப்படவுள்ள மின் மயானத்துக்கான மயான அபிவிருத்திக் குழு கடந்த சனிக்கிழமை பிற்பகல் தெரிவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த குழுத் தெரிவில்

மின் மயான அபிவிருத்திக் குழுத் தலைவராக சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் ந.சிவபாலன்,செயலாளராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் இ.சிவமங்கை,பொருளாளராக அதிபர் தேவரதி, திட்ட இணைப்பாளராக அகிலன் முத்துக்குமாரசுவாமி, உப தலைவராக சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர் செ.மயூரன்,உப செயலாளராக சட்டத்தரணி திசாந்தினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் சாவகச்சேரி லயன்ஸ் கழகம்,கொடிகாமம் வர்த்தக சங்கம்,கைதடி வர்த்தக சங்கம்,சாவகச்சேரி இளைஞர் கழகம்,வைத்தியர்கள்,சமாதான நீதவான்கள்,கிராம சேவகர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் சார்பாக ஒவ்வொருவர் என்ற ரீதியில் 17பேர் கொண்ட மின் மயான அபிவிருத்திக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் மின் மயானம் நிறுவ சுமார் ஒன்றரைக் கோடி தேவை என்ற நிலையில் இதுவரை 18இலட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அமைச்சுக்களில்...

றுக்கு சென்ற இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தின் வாணிபப் பிரிவு அதிகாரி அங்கு அமைச்சரிடமே தர்க்கமிட்டு நடந்துகொண்ட விதம் அரசுக்குள் பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த புதன்கிழமை மாலை 6 மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இடம் பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில் சீனத் தூதரகத்தின் வாணிபப்பிரிவு அதி காரி கலந்துகொண்டார். இந்தக் கலந்து ரையாடலில் நெடுஞ்சாலைகள் அமைச் சர் என்ற வகையில் ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்த கலந்துரையாடல் நடந்து கொண்டிருந்தபோது கருத்து வெளி யிட்ட தூதரக வாணிபப் பிரிவு அதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி நிர்மாணத்துக்கான ஒப்பந்த தாரராக சீனாவை தெரிவு செய்தது.

அந்தத் திட்டத்தை ஆரம்பிக்கத் தேவையான கடன் வசதிகளை சீனாவின் எக்சிம் வங்கி வழங்கினால், துணை ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற் கான முழு சுதந்திரமும் சீனாவிடம் இருக்க வேண்டும் என்று சீன அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனால் துணை ஒப்பந்ததாரர்களின் அறிவும் அனுபவமும் சம்பந்தப்பட்ட திட்டங்களை தாமதமின்றி முடிக்க உத வும் என்றும் வாணிபப் பிரிவு அதிகாரி, இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் மற்றும் பிற அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

இதில் தலையிடவோ அதுபற்றி விவாதமோ இருக்கமுடியாது என்றும் வாணிபப் பிரிவு அதிகாரி வலியுறுத் தினார்.

சீனத் தூதரக வாணிபப் பிரிவு அதி காரி விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ, சீனாவுக்கு கொடுத்த திட்டங்களில் இதுபோன்ற முடிவை எடுக்க முடியாது என்றார்.

இந்த திட்டங்கள் அரசாங்கத்தின் நிதியுதவி மற்றும் அரச நிறுவனங்களின் ஊடாக முன்னெடுக்கப்படுவதாகவும், அவை அமைச்சுகளின் கீழ் மேற்கொள் ளப்படுவதால், ஒப்பந்ததாரர்களைத் தெரிவு செய்வதில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் ஓரளவு அதிகாரம் இருக்கவேண்டும் என்றும் அமைச்சர் இங்கு கூறினார்.

ஆனால் இதற்கு உடன்படாத சீனத் தூதரக அதிகாரி, இலங்கையில் மட்டு மன்றி உலகின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான செயற்றிட்டங்களை சீனா முன்னெடுத்து வருவதாகவும், இவ்வா றானதொரு விடயம் அந்த நாடுகளில் இடம்பெறவில்லை எனவும் கூறியதுடன் அமைச்சரின் கருத்தை நேரடியாக நிராகரிப்பதாக கடுந் தொனியில் தெரி வித்துள்ளார்.

சீனத் தூதரக அதிகாரியின் நிலைப் பாட்டினால் ஆத்திரமடைந்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அப்படி அதைச் செய்ய முடியாது என்றும் அமைச்சர்களுக்கும் இலங்கை நிர்வாக அதிகாரிகளுக்கும் அங்கு ஏதாவது அதிகாரம் இருக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஆனாலும் அமைச்சரின் கருத்தை ஏற்காத சீனத் தூதரக அதிகாரி, 'நாங்கள் இலங்கையில் உள்கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறோம். அதை நீங்கள் மதிக்கவேண்டும். எவ்வாறாயினும், இது வேண்டுமென்றே தடை செய்யப்பட் டால், அது எங்கள் ஒப்பந்தக்காரர்க ளைப் பாதிக்கலாம், அது சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லெண் ணத்தையும் பாதிக்கலாம்" என்று மீண் டும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, இந்தக் கூட்டம் முடிவின்றி முடிந்துள்ளபோதும் சீன அதிகாரிகளின் இவ்வாறான தலையீடு கள் வேறு பல அமைச்சுகளிலும் இடம் பெற்றுள்ளதால் சில அமைச்சர்கள் ஒன்றி ணைந்து இது விடயம் தொடர்பில் அரச மேலிடத்தில் பேச்சுக்களை நடத்த தயா ராகி வருவதாக அறியமுடிந்தது. (அ)

## ரயிலுடன்...

பயணித்த உத்தரதேவி தொடருந்துடன் மோதியே நேற்று இரவு 6.45 மணியள வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக - சங்கத்தானையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதில், வரணி இயற்றாளையைச் சேர்ந்த மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவ னான உதயகுமார் பானுஷன் (வயது-18) என்ப வரே உயிரிழந்தார்.

இன்றைய தினம் பாடசாலையில் உயர்தர மாணவர்கள் பங்கேற்கும் ஒன்றுகூடலும் விருந்துபசார நிகழ்வுக் காக இரட்டைச் சகோதரர்கள் சாவகச் சேரி நகரில் ஆடை எடுக்கச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்ற தாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். (ஐ)

## எந்த...

வழிகளிலும் மக்களை வதைக்கின்றனர். சந்தைக்கு சென்றால், பொருட்களின் விலைகள் உச்சம். இதயம், வயிறு என எல்லாம் எரிகின்றது.வாழ்வதற்கு உரிய வழி இல்லை.

எமது ஆட்சியின்கீழ் சிறந்த நிலைமை உருவாக்குவோம். 'டீல்' அரசியலுக்கு இடமில்லை. சுரண்டி பிழைப்பவர்களுக் கும் வாய்ப்பு இல்லை. மக்களுக்கான அரசியலே நடத்தப்படும். தேசியக் கொள்கையை முன்னிறுத்தி நடவ டிக்கைகள் இடம்பெறும். தனிநபர் செல் வாக்குக்கு இடமில்லை-என்றார். (அ)

## வடக்கு...

பதவியேற்றதிலிருந்து இந்தியாவுட னான நல்லுறவு தொடர்பில் உன்னிப் பாக அவதானம் செலுத்தி வந்திருக் கின்றார். இரு நாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்றுவதுடன் இரு நாடுகளின் பொருளாதாரங்களுக்கு இடையிலான தொடர்பு மேலும் வலுவடையவேண் டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பம் என்றும் கூறியுள்ளார்.

இந்தியாவின் பிரபல ஆங்கில நாளித ழான "த இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரி கைக்கு வழங்கிய விசேட நேர் காணலி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதிசெய்யுமாறு இந்திய பிரதமருக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். இது இரு நாடுகளுக்கும் இடையிலான முக் கிய விடயமாக மாறிவருவதாக கருது கிறீர்களா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர் தெரிவித்தவை வருமாறு,

அண்மையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையில் புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளுக்காக விசேட நிபுணர் குழுவொன்றை நியமித்திருக்கிறார் என்றும், அந்தக் குழுவின் ஊடாகத் தயாரிக்கப்படும் வரைவு அமைச்சரவையிலும் பாராளு மன்றத்திலும் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார். அவருக்கு அந்த வாய்ப்பை வழங்கவேண்டும் என்று கருதுகின்றேன்.

பல்வேறு பிரிவுகளில் பணியாற்றிய வன் என்றவகையில் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பிரதேசங் களுக்கு விஜயம் செய்யும்போது அங் குள்ள மக்கள் அரசமைப்பில் நாட்டம் காண்பிக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடிந்தது. மாறாக அபிவிருத்தி யும் வாழ்வாதார வசதிகளுமே அவர்க ளின் தேவைகளாகக் காணப்படுகின்றன.

எனவே, அனைத்து அரசியல்கட்சி களும் இதனை முன்னிறுத்தி செயல் பட வேண்டியது அவசியமாகும். இதனை இரண்டு கட்டங்களாக முன்னெடுக்க முடியும். முதலாவது அனைத்துத் தரப்பி னரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரச மைப்பு ஒன்றை உருவாக்குவதாகும். இரண்டாவது வடக்கு, கிழக்கு மாகா ணங்களை எவ்வாறு அபிவிருத்தி செய் வது என்ற புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதாகும் -என்றார். (ஐ)

## தொற்றால்...

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15ஆயிரத்து 313ஆக உயர்வடைந்துள்ளது.

## வடக்கு...

ஆசிரியர்கள் தெரிவிக்கையில்-

நாங்கள் பல இன்னல்களுக்கு மத்தி யில் பல வருடங்களாக தொண்டர் ஆசி ரியர்களாக கடமையாற்றி வருகின்றோம்.

போரால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த மற்றும் விசேட தேவையுடைய வர்களை கொண்ட குடும்பத்தில் இருந்து தான் நாங்கள் தொண்டர் ஆசிரியர் களாக கடமையாற்றி வருகின்றோம்.

இந்நிலையில் கடந்த 21ஆம் திகதி அமைச்சினால் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் 60 தொண்டர் ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ளார்கள் என்றும் அவர்களது நியமனம் தொடர்பாக ஆராயுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், வடக்கு மாகாணத்தில் 210 தொண்டர் ஆசிரியர்கள் உள்ளோம். 60 தொண்டர் ஆசிரியர்கள் என அந்தக் கடிதத்தில் எவ்வாறு வந்துள்ளது என எமது வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தை வினவியபோது, அவர்கள் தமக்கு இது தொடர்பாக எதுவும் தெரியாது என்று கூறுகின்றனர்.

நாங்கள் இது தொடர்பாக அமைச்சை வினவியபோது, வடக்கு மாகாண தொண் டர் ஆசிரியர் சங்கம் அனுப்பிய பெயர் விவரங்களின் அடிப்படையிலேயே தாங்கள் குறித்த கடிதத்தை அனுப்பியதாக தெரிவிக்கின்றனர். மிகுதி 110 பேரின் பெயர்களும் அந் தக் கடிதத்தில் உள்ளடக் கப்பட வேண்டும் என நாங்கள் கவனவீர்ப் புப் போராட்டத்தை முன்னெடுத்துள் ளோம் -என்றார். (அ-03)

## அடுத்த...

மீண்டும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நல்லாட்சியின்போது தலைமைப் பதவிகளை வகித்தவர்களின் செயல் பாடுகள் காரணமாகவே அந்த அரசு கவிழ்ந்தது. தற்போதைய அரசும் அப்படிதான். எனவே, விரைவில் எங்கள் ஆட்சி வரும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சு பதவி எனக்கு வழங்கப்படும் என சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார். எமது ஆட்சி வருவது உறுதி என்பதால், எனக் கான அமைச்சு பதவியும் உறுதியாகி யுள்ளது. நல்லாட்சியின்போது, சட்டம், ஒழுங்கு அமைச்சு பதவியை எனக்கு வழங்கு மாறு மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்த பதவி எனக்கு வழங்கப்பட்டால் முதலில் அவரைத்தான் கைது செய்வேன் என அஞ்சினார். அதனால் பதவி வழங்க வில்லை. வழங்கப்பட்டிருந்தாலும் மைத்திரி கூறியது நடந்திருக்கும்- என்றார். (அ)

## யாழ்ப்பாண...

பரவல் அதிகரிக்கின்ற நிலையில் மக்கள் அனைவரும் மூன்றாம் கட்ட தடுப் பூசியை பெற்றுக் கொள்வதன் மூலம் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

ஏற்கனவே, இராணுவம் மற்றும் சுகாதாரப் பிரிவினரால் மூன்றாம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி யாழ்ப்பாண மாவட் டம் முழுவதிலும் பரவலாக பொதுமக் களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், பொதுமக்களுக்கு மூன் றாம் கட்ட தடுப்பூசி வழங்குவதற்குரிய சகல உதவிகளும் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகிறது. எனவே, பொதுமக்கள் தயக்கமின்றி தங்கள் பிர தேசத்தை தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்ளவேண்டுமாயின் மூன்றாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக் கொள்வ தால் தங்களை தொற்றிலிருந்து பாதுகாத் துக்கொள்ள முடியும் - என்றார். (ஐ)

# ஜனாதிபதி செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 25

மத்திய மாகாண ஆசிரிய உதவியா ளர்களுக்கு நீண்டகாலமாக நியமனம் வழங்கப்படாதுள்ளமையை கண்டித்து தற்சமயம் கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரிய உதவியாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

நீண்ட காலமாக வழங்கப்படாதுள்ள தங்களது நியமனங்களை உடடியாக வழஙகுமாறு அவர்கள் இதன்போது கோரியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கமும் ஆதரவை வழங்கியுள் ளது. (அ)

## ஈஸ்டர்...

இவ்வளவு நாட்களாக உள்நாட்டில் நீதி கிடைக்கும் என நம்பியமை காரணமாக மேற்கூறிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். (அ)

## உரிமையை...

சிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பல்வேறு அரசியல் நிலைப் பாடுகளைக்கொண்ட கட்சிகள், பொது வானதொரு இலக்கை அடைவதற்காக, பொதுவானதொரு வேலைத்திட்டத் தின்கீழ் இணைவதுதான் கூட்டணி அரசாகும். அங்கு கருத்துகள் மற்றும் விமர்சனங்கள் இருக்க வேண்டியது ஜனநாயகப் பண்பாகும். பயணம் தவறெனில் அதனை சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு பங்காளிகளுக்கு இருக்கின்றது.

அதற்காக 'மைக்' கிடைக்கும் இடங்களில் எல்லாம் பொறுப்பற்ற விதத்தில் கருத்துகளை வெளியிடுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. பாரா ளுமன்றக்குழுக் கூட்டம் கூட்டம் நடை பெறும். அமைச்சரவைக் கூட்டமும் இடம்பெறும். அப்போது விமர்சனங் களை முன்வைக்கலாம். தவறுகளை சுட்டிக்காட்டலாம்.

அதனைவிடுத்து கூட்டு பொறுப்பை மீறும் வகையில் பொதுவெளியில் விமர்சங்களை முன்வைப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல-என்றார். (அ)

## தமிழர்...

தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணாமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. தமிழ் மக்க ளின் பிரதான எதிர்பார்ப்பான அரசியல் பிரச்னைக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும்.

ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டே தீரும். தமிழர் பிரதிநிதிக ளையும் எமது அரசில் இணைத்துப் பயணிப்போம்.

ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களைப் புறக்கணித்து - அவர்களின் பிரச்னைக ளுக்குத் தீர்வு காணாமல் இருந்தபடி யால்தான் நாடு இன்று சர்வதேசத்திடம் மண்டியிடவேண்டிய நிலைக்கு வந் துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராகக் குற்றங் களை இழைத்த ராஜபக்ஷ அரசு, அதற் கான பொறுப்பை ஏற்றுப் பாதிக்கப்பட் டவர்களுக்குப் பரிகாரம் வழங்கியிருந் தால் இலங்கை விவகாரத்தில் ஐ.நாவும் சர்வதேச நாடுகளும் தலையிட்டிருக்க வேண்டிய நிலை வந்திருக்கமாட்டாது- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து மைத்திரி பொறுப்பு கூறவேண்டும்!

## ரவி கருணாநாயக்க வலியுறுத்து



**கொழும்பு, ஜன. 25**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.**

'நல்லாட்சியின்போது ஜனாதிபதியாக செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவே பாதுகாப்பு அமைச்சராகவும் செயல்பட்டார். எனவே, ஈஸ்டர் தாக்குதலுக்கு அவர் பொறுப்புக்கூறவேண்டும்.

ஐந்தாண்டுகள் மைத்திரி ஜனாதிபதியாக செயற்பட்டார். அக்காலப்பகுதியில் அவர் தேங்காய் துருவினாரா?

நல்லாட்சியின்போது 90 வீதமான நல்ல விடயங்களை ஐக்கிய தேசியக் கட்சியே மேற்கொண்டது. எம்மைப் பழிவாங்கும் நோக்கிலேயே மைத்திரி தரப்பு செயல்பட்டது. அந்த உண்மை வெளியில் வரும்.

அதேவேளை, மத்திய வங்கியானது எனக்கு கீழ் இருக்கவில்லை. அரச வங்கிகள் அப்போதைய அமைச்சர் கபீர் ஹாசீம் வசம்தான் இருந்தது. எனவே, பிணைமுறி விவகாரம் தொடர்பில் அவரிடம்தான் கேட்க வேண்டும்."- என்றார் ரவி கருணாநாயக்க. (அ)



# ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் நினைவு நேற்று மட்டக்களப்பில்!

*திருமலை, ஜன. 25*

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் 16ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டு. ஊடக அமையத்தில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியச் செயலாளர் எஸ்.நிலாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊடகவியலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பின ருமான பா.அரியநேத்திரன், ஊடக வியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

2006 இல் உயர்தரக்கல்வியை முடித்து பின்பு, பல்கலைக்கழக அனு மதிக்காக காத்திருந்த 5 மாணவர்கள், திருகோணமலை கடற்கரையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்ட இந்த மாணவர்களை சுகிர்தராஜன் நிழற்பட மெடுத்து செய்தி வெளியிட்டிருந்தார்.

மாணவர்களின் இறப்புக்கு கைகுண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசைதிருப்ப முயற்சிக்கப்பட்டபோது, இவர் எடுத்த நிழற் படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக் காட்டின. இதனால் அரசுக்கு சர்வதேச ரீதியில் அவப்பெயரும், அழுத்தங்களும் ஏற் பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திருமணத்தில் பங்கேற்ற 26 பேருக்கு கொரோனா!

*கொழும்பு, ஜன. 25*

மினுவாங்கொடை, கமராகொட பிரதேசத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரின் திருமண நிகழ்வின் பின்னர், மூத்த சகோதரர் உள்ளிட்ட 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணா மற்றும் தம்பி இருவரும் ஒரே தினத்தில் திருமணம் செய்துள்ளனர்.

சந்தலங்காவ பிரதேசத்திலுள்ள தேவாலயமொன்றில் இவ்விரு திருமண நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளதுடன், திவுலம்பிட்டிய பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்து இந்த திருமண நிகழ்வை முன்னெடுத்துள்ளமை சுகாதாரப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த திருமண நிகழ்வில் இரு தரப்புகளிலுமிருந்து 350 பேர் பங்குப்பற்றியுள்ளனர்.

அவர்களில் ஒரு மணமகன் உள்ளிட்ட மேலும் ஐவர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதனை தொடர்ந்து கமராகொட ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தில் இடம்பெற்ற இந்த திருமண நிகழ்வில் பங்குற்றிய 28 பேருக்கு மினுவாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தினூடாக அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் 26 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கமராகொட பிரதேசத்தைச் சேர்ந்த அநேகமானவர்கள் அவர்களின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தப்பட்டுள்ள அநேகமானவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் செயல்படுவதாகவும், திருமண நிகழ்வில் கலந்துகொண்ட அநேகமானவர்கள் அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்காமல் அவர்களுக்கு சொந்தமான கடைகளை திறந்து வைத்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# சட்டவிரோத மணல் அகழ்வால் எமது வளத்தை இழக்க முடியாது!

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு



*கிளிநொச்சி, ஜன. 25*

"சட்டவிரோத மணல் அகழ்வுகளால் மாவட்டத்திலிருக்கும் மிகப் பெரிய வளத்தை நாங்கள் இழக்க முடியாது. இதனால் ஏற்படும் அழிவுகள் - ஆபத்துக்கள் மிக அதிகம் எனவே அனைவரும் இதில் பொறுப்புடன் செயல்படவேண்டும்", என மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாவட்ட செயலக மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சட்டவிரோத மணல் அகழ்வுகளால் இருக்கின்ற மிகப் பெரிய வளத்தை நாங்கள் இழக்க முடியாது. இதனால், ஏற்படும் அழிவுகள் ஆபத்துக்கள் மிக அதிகம். எனவே, அனைவரும் இதில் பொறுப்புடன் செயல்படவேண்டும் அதிகாரிகளான நாங்கள் இன்று இங்கே கடமையில் இருப்போம். சில வருடங்களுக்குள் சென்று விடுவோம். ஆனால், இந்த சமூகமும் இந்த மக்களும் பிரதேசத்திலேயே தொடர்ந்தும் இருக்கப் போகின்றார்கள். ஆகவே, இந்த சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.

குறிப்பாக, இங்கே இருக்கின்ற ஒரு பெரிய வளமான இரணைமடு குளத்தின் கீழ் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படு கின்றன. இதனால், எதிர் காலத்தில் பெரிய ஒரு வளத்தை நாங்கள் இழந்து போக முடியாது. இதனால் ஆபத்துக்களும் அழிவு களும் அதிகமாக இருக்கும். எனவே, சமூகத்தின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக மிக அவசியமா னது. அந்த அடிப்படையிலேயே குறிப்பாக முதற்கட்டமாக 5 இடங்களில் இராணுவ காவலரண்களை அமைத்து அதன் மூலம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு இதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கு கமக்காரர் அமைப்புகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன இடங்களை அடையாளப்படுத்தி காவலரண்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வழங்க வேண்டும் என்றும் கூறினார். (ஐ)

# மூன்று தடுப்பூசிகளையும் பெற்றோருக்கே அங்கீகாரம்!

*கொழும்பு, ஜன. 25*

கோவிட்-19 தடுப்பூசிகளின் மூன்று டோஸ்களையும் பெற்றவர்களே இனி இலங்கையில் முழுமையாக தடுப்பூசி போட்டவர்களாக அங்கீரிக்கப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

முழுமையாக தடுப்பூசி போடப்பட்டதாகக் கருதப்படுவதற்கு மக்கள் முதல், இரண்டாவது மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றிருக்க வேண்டும். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# மின்சக்தி அமைச்சுக்கு மத்திய வங்கி டொலர்!

*கொழும்பு, ஜன. 25*

மின்சக்தி வலுசக்தி அமைச்சுக்கு மத்திய வங்கி 5 கோடியே 30 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் உள்ள இரண்டு எரிபொருள் தாங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் 53 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்படவுள்ளதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

35,000 மெட்ரிக் தொன் பெற்றோல் மற்றும் 37,500 மெட்ரிக் தொன் டீசலைப் பெறுவதற்காக இந்தக் கொடுப்பனவு செலுத்தப்படவுள்ளது.

இதன்படி, நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது எனவும், இதனூடாக தடையற்ற மின்சார விநியோகத்தை மேற்கொள்ளமுடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.